இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 158 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 05 – வெள்ளிக்கிழமை 19 ஜனவரி 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 158: Thiruvalluvar Year - 2055 - Thai 05 - Friday 19 January 2024 - Madurai 12 Pages ₹ 5.00

# இளைஞரணி மாநாடு! படைக்கட்டும் இந்தியாவின் புது வரலாறு !!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

'எல்லாருக்கும் எல்லாம்' என்கிற இலட்சியத்தைக் கொண்டுள்ள நமது திராவிட மாடல் அரசின் சார்பில் தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளில் தமிழ்நாட்டு மக்களின் மனதில் மகிழ்ச்சி பொங்குகிற வகையில் ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு இவற்றுடன் ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணமும் அரிசி அட்டைதாரர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டன.

பொங்கல் நன்னாளில் ஏழை - எளியோர் புத்தாடை உடுத்திட ஏதுவாகவும், நெசவாளர்களின் வாட்டம் போக்கிடும் செயலாகவும் வேட்டி - சேலைகள் பல ஆண்டுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில், இந்த ஆண்டு அவற்றைத் தாமதப்படுத்தாமல் பொங்கல் நேரத்திலேயே வழங்கியது திராவிட மாடல் அரசு. தரமாகவும் அழகாகவும் வேட்டி - சேலைகள் இருப்பதைப் பொங்கல் நாளில் அதனை உடுத்தியிருந்தது தொடர்பான பதிவுகளைச் சமூக வலைத்தளத்தில் கண்டேன்; நெஞ்சத்தில் மகிழ்ச்சி பொங்கிற்று!

அனைத்துத் தரப்பு மக்களும் கொண்டாடும் திருநாள்தான் பொங்கல் விழா. அதனைத் தமிழர் திருநாள் என்று இன உணர்வும் மொழி உணர்வும் கொண்ட பண்பாட்டுத் திருவிழாவாக மாற்றிய பெருமை திராவிட இயக்கத்திற்குரியது. எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி, தமிழர்கள் அனைவரும் **'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறள் நெறியைப் பின்பற்றி வாழ்கின்ற தமிழ் நிலத்தின் உயர்ந்த பண்பாட்டை எடுத்துரைக்கும் வகையிலும், மத வெறியை - சாதிய வன்மத்தை - மொழி ஆதிக்கத்தை இங்கே விதைக்க நினைப்போருக்கு ஒருபோதும் இந்த மண்ணில் இடமில்லை என்பதைக் காட்டும் வகையிலும் சமூகநீதி இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 'சமத்துவப் பொங்கல்' விழாவைத் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடுமாறு உங்களில் ஒருவனான நான் அன்பு வேண்டுகோள் விடுத்திருந்தேன்.**

உங்களுக்கு அன்புக் கட்டளையிடும்போது, அதனை முதலில் செயல்படுத்தக் கூடியவனாக நான் இருக்க வேண்டும் என்பதை எப்போதும் நான் மறப்பதில்லை. அதனால், எனது கொளத்தூர் தொகுதியில் சமத்துவப் பொங்கல் விழாவைப் பல்வேறு மதத்தினர், பல மொழியினர் சூழக் கொண்டாடி மகிழ்ந்தேன்.

அதுபோலவே, **தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் நம்முடைய கழக நிர்வாகிகள் சமத்துவப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடிய செய்திகள் தொடர்ந்து வந்தபோது சர்க்கரைப் பொங்கலாக இதயம் இனித்தது. தலைநகரான சென்னை மாநகரம் தொடங்கி, ஊராட்சிகள் வரை சமத்துவப் பொங்கலின் மணம் வீசியது. இதுதான் திராவிட மாடல் தமிழ்நாடு. இதுவே, இந்திய ஒன்றியம் முழுமைக்கும் தேவைப்படுகிறது. அதனை அரசியல் களத்தில் எடுத்துரைக்கும் வகையில், சேலம் மாநகரில் ஜனவரி 21-ஆம் நாள் மிகுந்த எழுச்சியுடன் நடைபெறவிருக்கிறது கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு.**

கழகத் தலைவர் என்ற பொறுப்பைச் சுமந்திருக்கும் உங்களில் ஒருவனான என்னை உங்கள் அனைவரிடமும் அடையாளப்படுத்தியது இளைஞரணிதானே! 1980-ஆம் ஆண்டில் மதுரை ஜான்சிராணி பூங்காவில் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள் இளைஞரணியைத் தொடங்கி வைத்து, அதனை என் கைகளில் ஒப்படைத்தார். 1982-ஆம் ஆண்டு முதல் இளைஞரணிச் செயலாளராகப் பணியாற்றத் தொடங்கி, 30 ஆண்டுகளுக்கு மேல் அதனை வழிநடத்தி, தலைவர் கலைஞரின் நம்பிக்கையைப் பெற்றேன். 2007-ஆம் ஆண்டு நெல்லை மாநகரில் இளைஞரணியின் முதல் மாநில மாநாடு, வெள்ளி விழா மாநாடாகச் சிறப்பாக நடைபெற்று, அடுத்த தலைமுறையினரைக் கழகத்தின் பக்கம் ஈர்த்தது.

கழகத் தலைமையின் சுமையைப் பங்கிட்டுக் கொள்ளும் அணியாக இளைஞரணி எப்போதும் முன்னிற்பது வழக்கம். இப்போதும் அந்த வழிமுறைப்படி, **2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கும் சூழலில், ஜனநாயகப் போர்க்களத்திற்குக் கழக வீரர்களை ஆயத்தப்படுத்தும் பயிற்சிப் பாசறையாக அமையவிருக்கிறது, சேலத்தில் நடைபெறும் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு. இது கூடிக் கலையும் நிகழ்வல்ல; கொள்கையைக் கூர் தீட்டும் உலைக்களம்! மாநில உரிமை முழக்கத்தை முன்னெடுக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடு.**

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, கழகத்தையும் தமிழ்நாட்டையும் தலைமையேற்று வழிநடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற கழக மாநில மாநாட்டில் ஐம்பெரும் முழக்கங்களை நமக்கு வழங்கினார். அதில் ஐந்தாவது முழக்கம், 'மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி' என்பதாகும். பன்முகத்தன்மை கொண்ட இந்திய ஒன்றியம் வலிமையாக இருக்க வேண்டுமென்றால், மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதே மாநில சுயாட்சிக் கொள்கையின் நோக்கம். அது நிறைவேற்றப்பட்டால்தான், உண்மையான கூட்டாட்சிக் கருத்தியலின்படி இந்திய ஒன்றியம் வலிமையுடன் செயல்பட முடியும்.

> **2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கும் சூழலில், ஜனநாயகப் போர்க்களத்திற்குக் கழக வீரர்களை ஆயத்தப்படுத்தும் பயிற்சிப் பாசறையாக அமையவிருக்கிறது, சேலத்தில் நடைபெறும் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு. இது கூடிக் கலையும் நிகழ்வல்ல; கொள்கையைக் கூர் தீட்டும் உலைக்களம்! மாநில உரிமை முழக்கத்தை முன்னெடுக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடு.**

பத்தாண்டுகால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் மாநிலங்களின் உரிமைகள் பலவும் பறிபோய்விட்டன. கல்வி உரிமை, மொழி உரிமை, நிதி உரிமை, சட்ட உரிமை என மாநிலங்களின் உரிமைகளை ஒன்றிய அரசு அபகரிக்கும் போக்கு தொடர்வதையும், ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிரான அராஜகப் போக்கு மிகுவதையும் காண்கிறோம். **மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குப் போட்டியாக, நியமனப் பதவியில் உள்ள ஆளுநர்களை வைத்து அரசாங்கத்தை நடத்த நினைக்கும் எதேச்சாதிகாரப் போக்கு என்பது மாநிலங்களுக்கு எதிரானது மட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டத்திற்கே எதிரானதாகும்.**

**ஆளுநர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த பொறுப்புக்குச் சிறிதும் தகுதியில்லாதவர்களாக, மலிவான - தரம்தாழ்ந்த அரசியல் செய்யும் அவலத்தை இந்தியா இப்போதுதான் காண்கிறது.** ஆன்மீக உணர்வுகளை அரசியலாக்கி மதவெறியைத் தூண்டுவது, இந்தி - சமஸ்கிருதத்தைத் திணித்துத் தமிழ் உள்ளிட்ட அவரவர் தாய்மொழிகளையும் அதன் பண்பாட்டையும் சிதைப்பது, **திருவள்ளுவரில் தொடங்கி தெருவில் நடந்து போவோர் வரை எல்லார் மீதும் காவிச் சாயம் பூசுவது என்பதை ஒன்றிய ஆட்சியாளர்களே முன்னின்று செய்கின்ற மூர்க்கத்தனமான அரசியலை ஜனநாயக வழியில் முறியடிக்கும் வலிமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு.** அதை இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசர - அவசிய தேவை இருக்கிறது என்பதை உணர்த்தக்கூடிய அளவில் சேலத்தில் கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெறவிருக்கிறது.

## உங்களில் ஒருவன்

சென்னையையும் பிற மாவட்டங்களையும் கடுமையாகப் பாதித்த மிக்ஜாம் புயல் - மழை காரணமாகவும், தென்மாவட்டங்களில் கடும் தாக்கத்தை ஏற்படுத்திய வரலாறு காணாத மழை - வெள்ளத்தினாலும் இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்ட இளைஞரணி மாநில மாநாடு, ஜனவரி 21-இல் சேலத்தில் எழுச்சியுடன் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாண்புமிகு இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான தம்பி உதயநிதி முன்னெடுத்து வருகிறார். இளைஞரணி நிர்வாகிகள் அனைவரும் அவருக்குத் தோளோடு தோள் நின்று பணியாற்றுவதைக் காண்கிறேன்.

அதுபோலவே, சேலம் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக உள்ள கழக முதன்மைச் செயலாளர் - மாநாடுகளைச் சிறப்பாக நடத்திக்காட்டுவதில் வல்லவரான மாண்புமிகு கே.என்.நேரு அவர்களும், சேலம் மாவட்டக் கழக நிர்வாகிகளும் பந்தல் அமைப்பு தொடங்கி அனைத்து ஏற்பாடுகளையும் இரவு - பகலாக மேற்கொண்டு வருகிறார்கள்.

இளைஞரணி மாநில மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தும் வகையில் தமிழ்நாடு தழுவிய அளவில் இருசக்கர வாகனப் பேரணியை கண்கவரும் வகையில் நடத்திக் காட்டிய இளைஞரணி நிர்வாகிகள், இன்று (ஜனவரி 18) காலையில் சென்னை சிம்சன் அருகே உள்ள பெரியார் சிலையிலிருந்து சுடரேந்தித் தொடர் ஓட்டத்தைத் தொடங்கியுள்ளனர். இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி தொடங்கி வைத்த இந்தச் சுடரோட்டம் சேலம் வரை தொடர்கிறது.

இந்த நேரத்தில், நான் நினைத்துப் பார்க்கிறேன். காஞ்சிபுரத்தில் 1972-ஆம் ஆண்டு நடந்த மாநில சுயாட்சி மாநாட்டின்போது, கோபாலபுரம் இளைஞர் தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணா நினைவிடத்திலிருந்து அண்ணா ஒளிச்சுடரை ஏந்தி - ஓடி, மாநாட்டு மேடையில் தலைவர் கலைஞர், நாவலர், இனமானப் பேராசிரியர் ஆகியோரிடம் நான் வழங்கியது என் நினைவுக்கு வருகிறது. சேலத்தில் நடைபெறும் மாநில மாநாட்டிற்காக இளைஞரணியினர் ஏந்தியுள்ள ஒளிச்சுடர், காலம்தோறும் கொள்கை வெளிச்சம் பாய்ச்சிடும் அணியாக இளைஞரணித் திகழும் என்பதை மெய்ப்பிக்கிறது. மாநாட்டில் தலைமையுரை ஆற்றுகின்ற உங்களில் ஒருவனான நானும் மனதளவில் என்றும் என்னை இளைஞனாகவே கருதுகிறேன்.

நான் வளர்த்து ஆளாக்கிய அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் பங்கேற்பதில் ஒரு தாயின் உணர்வுடன் பெருமிதம் கொள்கிறேன். தொடர்ச்சியான பணிகள் காரணமாக, மாநாட்டிற்கு அழைப்பு விடுத்து ஒன்றிரண்டு கடிதங்களே என்னால் எழுத முடிந்தது. எனினும், இளைஞரணியின் 25-ஆம் ஆண்டினையொட்டி 2007-ஆம் ஆண்டு நெல்லையில் நடைபெற்ற இளைஞரணியின் முதலாவது மாநில மாநாட்டின்போது, நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்புகளுக்கு எழுதிய 25 கடிதங்களை முரசொலியின் ஒவ்வொரு நாளும் முதல் பக்கத்தில் மீண்டும் வெளியிட்டு, இன்றைய தலைமுறையினருக்கு வரலாற்றுப் பாடத்தைக் கற்றுத் தந்திருக்கிறது கழகம்.

மாநாட்டு நாள் நெருங்கி வரும் நிலையில், உங்களில் ஒருவனான நான் இந்த மடலை எழுதுகிறேன். நாடாளுமன்றத் தேர்தலும் நெருங்கி வருகிறது. **ஜனநாயகத்தின் அடர்ந்த இருண்ட காலத்திலிருந்து இந்தியாவை மீட்டெடுத்து, மீண்டும் ஒரு விடுதலை வெளிச்சம் நிறைந்த காலத்தினை மக்கள் காண்பதற்கு இந்தியா கூட்டணியின் முன்னெடுப்புகள் தொடங்கியுள்ளன. இந்தப் பொருத்தமான சூழலில்தான், மாநில உரிமை மீட்பு முழக்கத்தினை மையமாகக் கொண்டு இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெறுகிறது.**

தம்பி உதயநிதி அழைக்கிறார். கழக உடன்பிறப்புகளே சேலத்தில் நடைபெறும் இளைஞரணி மாநாட்டில் திரண்டிடுவீர். நான் முன்பே சொன்னதுபோல கடல் இல்லாச் சேலம் மாவட்டம், கருப்பு - சிவப்புக் கடல் ஆகட்டும். இந்தியாவின் ஒளி மிகுந்த புது வரலாற்றை இளைஞரணி படைக்கட்டும்.

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2055
தை 04
18.01.2024.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 19-01-2024

# குறளும் குதர்க்கவாதிகளும் - 2

பரிமேலழகர் உரை அவருக்கு உடன்பாடானதாக இல்லை. எனவே வள்ளுவர் கருத்துக்கு இணங்க உரை செய்ய வேண்டும் என்றார். அதற்காக குழு அமைத்தார். **“நம் நாட்டின் அரசியல் முதல் மக்களின் ஒழுக்கம் வரை சீர்பட வேண்டுமானால் குறளைப் படியுங்கள்” என்று பிரச்சாரம் செய்தார் பெரியார். “நமக்கு ஒரு வேத நூல், மூல நூல், நெறி நூல், வழிகாட்டி நூல் ஒன்று இருக்கிறதென்றால் அது திருக்குறளேயாகும். அதை நமது மக்கள் படிக்க வேண்டும். மாணவர்களும், புலவர்களும் ஓய்வு நேரங்களில் திருக்குறள் பிரச்சாரம் செய்ய வேண்டும். நீங்கள் என்ன மதத்தினர் என்று கேட்டால், ‘வள்ளுவர் மதம்’ என்று சொல்லுங்கள். உங்கள் நெறியென்னவென்றால், ‘குறள் நெறி’ என்று சொல்லுங்கள்”** என்று சொன்னார். திருக்குறள் எழுச்சி தொடங்கியதும்தான் கம்பராமாயணத்தை தூக்கிக் கொண்டு ஒரு கூட்டம் கிளம்பியது.

முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு, குறளாசானைப் போற்றும் அரசாக மாறியது. இது அவர்களுக்கு மிகப்பெரிய சிக்கலாக மாறியது.

**திருவள்ளுவர் பிறந்த காலத்தை கி.மு.31 என்று கணித்தார் மறைமலையடிகள். அதனை அறிஞர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதன்படி பார்த்தால் இன்று 2024 என்பதுடன் 31 ஐ கூட்டினால் 2055 என்று வரும். இதுதான் திருவள்ளுவர் ஆண்டு. தமிழறிஞர்களின் இந்த ஆண்டுக் கணக்கை முதல்வர் கலைஞர் 1971 இல் ஏற்றுக் கொண்டு தமிழ்நாடு அரசின் அரசாணையாக வெளியிட்டார். அதுவே இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகிறது.**

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் திருவள்ளுவர் படத்தை வைக்க காரணமானவர் கலைஞர். தமிழ்நாட்டில் ஓடும் பேருந்துகளில் திருவள்ளுவர் படத்தையும், குறளையும் எழுதி வைக்க உத்தரவிட்டார் பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர். மயிலை திருவள்ளுவர் கோவிலை சீரமைத்தார் கலைஞர். தலைநகர் சென்னையில் வள்ளுவருக்கு மாபெரும் கோட்டம் கட்டினார் கலைஞர். 1956 ஆம் ஆண்டுமுதல் ‘முரசொலி’யில் ‘குறளோவியம்’ தீட்டத் தொடங்கினார். திருக்குறளுக்கு உரை எழுதினார் கலைஞர். 2000 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கன்னியாகுமரியில் 133 அடி சிலை வைத்தார் கலைஞர். இத்தகைய தனிச்சிறப்புகள் எந்தப் புலவர்க்கும், தனி நூலுக்கும் செய்யப் படவில்லை. இன்று உலகின் அடையாளமாக திருக்குறள் மாற இவைதான் காரணம் ஆகும்.**

குறளின் பெருமையை ஆரிய கும்பலால் குறைக்க முடியவில்லை. உடனே, ‘மனுவில் உள்ளதுதான் குறளில் இருக்கிறது’ என்று கிளம்பினார்கள்.

“வள்ளுவர் செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்

உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி?” என்று பாடியவர் மனோன்மணியம் சுந்தரனார். திருக்குறளை நன்கு உணர்ந்தவர்கள், மனுவை போற்றுவார்களா? என்று கேட்டுவிட்டு, போற்றமாட்டார்கள் என்று சீறியவர் சுந்தரனார். மனு விதைத்தது அறம் அல்ல. இரத்த வேற்றுமை, சாதி உயர்வு, ஆரியர் மேலாண்மை. ஆனால் குறளாசான் சொன்னது, ‘பிறப்பொக்கும்’ என்பதாகும். ‘வேதத்தில் இருப்பதுதான் திருக்குறளில் இருக்கிறது’ என்று நாகசாமி என்பவர் புத்தகம் எழுதினார். அதற்கு உடனடியாக மறுப்பை பதிவு செய்தார், குறளோவியம் தீட்டிய கலைஞரின் கொள்கை வாரிசு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**“வள்ளுவரை சிறுமைப்படுத்தி, திரிபு வாதத்தை முன்வைத்த முன்னாள் தொல்லியல் அதிகாரி நாகசாமியை, செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும் ‘குடியரசுத் தலைவர் விருதுகளை’ தேர்வு செய்யும் கமிட்டியில் உறுப்பினராக நியமித்திருப்பதற்கு தி.மு.க. சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**தமிழ் மொழிக்கு எதிராகவும், தமிழ் கலாச்சாரத்தினை தன் மனம் போன போக்கில் திரித்து பா.ஜ.க. மற்றும் மதவாத சக்திகளின் கவனத்தைத் தன்பால் திருப்பிடும் நோக்கில் எழுதி வரும் அவருக்கு ஏற்கெனவே பத்மவிபூஷண் விருதை வழங்கி கவுரவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு, இப்போது செம்மொழி தமிழாய்வு நிறுவனத்திலும் ஒரு பொறுப்பினை வழங்கி செம்மொழித் தமிழுக்கும் பேரிழுக்கு ஏற்படுத்த முயற்சி செய்து பார்த்திருக்கிறது”** என்று அந்த அறிக்கையில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். நாகசாமியின் கருத்தை முழுமையாக மறுத்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியும், ஆய்வாளர் மஞ்சை வசந்தனும் தனித்தனியாக நூல்களே எழுதினார்கள். இத்தகைய அறிவியக்கத் தாக்குதலில் ஆரியத்தின் பொய்முகம் கிழிந்தது. அதனால்தான் இறுதியாக அவர்கள் ஆர்.என். ரவியை பிடித்துக் கொண்டுள்ளார்கள்.

ஆளுநர், அவர் சொன்ன ஒவ்வொரு சொல்லுக்கும் பதில் சொல்லியாக வேண்டிய காலம் நெருங்கி வருகிறது. அவர் வாங்கித் தரும் கெட்டபெயர்களும் பா.ஜ.க. கணக்கில்தான் போய்ச் சேர்ந்து கொண்டு இருக்கிறது.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று ரத்தபேதம் இல்லை என்கிறது வள்ளுவம். ஒழுக்கம் உள்ளவன் உயர்குடி, ஒழுக்கம் இல்லாதவன் தாழ்ந்தகுடி என்று பிறப்பை மறுத்து ஒழுக்கத்தை வலியுறுத்திய அறநூல் அது. ஆனால் குலநிலை ஒழுக்கம் பேசுகிறது மனு. உழவே உலகத்தார்க்குத் தலை என்கிறது வள்ளுவம். ஆனால், உழவுத் தொழில் இழிவானது என்கிறது மனு. இரும்பை உடைய கலப்பையையும் மண்வெட்டியையும் வைத்து நிலத்தை வெட்டக் கூடாது என்கிறது மனு. பெண்ணை உடைமைப் பொருளாகச் சொல்கிறது மனு. வாழ்க்கைத் துணை என்றார் வள்ளுவர். எனவே அது வேறு, இது வேறு. இது படிக்கத் தெரிந்தவர்கள் அனைவர்க்கும் தெரியும். ஆர்.என்.ரவி வேறு வேலையைப் பார்க்கலாம்.**

●●



கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டை முன்னிட்டு, சேலம் மாநாட்டுத் திடல் நோக்கிய சுடர் தொடர் ஓட்டத்தை சென்னை அண்ணா சாலையில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைகளுக்கு அருகே நேற்று தொடங்கி வைத்து, அண்ணாசாலையில் ஊர்வலமாக நடந்து சென்ற காட்சி! இதில் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நே.சிற்றரசு உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், இளைஞர் அணியினர் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு!

# சென்னையில் இன்று கேலோ இந்தியா போட்டி!

## பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, ஜன. 19-**

**தமிழ்நாட்டுக்கு 3 நாட்கள் பயணமாக பிரதமர் மோடி இன்று (வெள்ளிக்கிழமை) வருகிறார். சென்னையில் ‘கேலோ’ இந்தியா விளையாட்டுப் போட்டியை அவர் தொடங்கி வைக்கிறார்.**

‘கேலோ’ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்கி இம்மாத இறுதி வரை நடைபெறுகின்றன.

சென்னை, திருச்சி, மதுரை, கோவையில் இந்த போட்டிகள் நடைபெறுகின்றன.

சென்னையில் உள்ள நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் இந்த போட்டிகளின் தொடக்க விழா இன்று நடைபெறுகிறது.

இந்த விழாவில் கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைக்க வேண்டும் என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமீபத்தில் டெல்லிக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடிக்கு நேரில் அழைப்பு விடுத்தார். அதைத்தொடர்ந்து தொடக்க விழாவில் பங்கேற்க பிரதமர் விருப்பம் தெரிவித்தார்.

கேலோ விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைப்பதற்காக சென்னைக்கு பிரதமர் நரேந்திர மோடி இன்று பிற்பகல் 4.55 மணிக்கு அவர் சென்னை விமான நிலையத்தை வந்தடைகிறார். அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் ஐ.என்.எஸ். அடையாறு பகுதிக்கு மாலை 5.15 மணிக்கு செல்கிறார். அங்கிருந்து சாலை மார்க்கமாக நேரு உள்விளையாட்டு அரங்கத்திற்கு மாலை 5.50 மணிக்கு வருகிறார். மாலை 6 மணிக்கு விழா தொடங்குகிறது. இந்த விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு ‘கேலோ’ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் கவர்னர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை மந்திரி அனுராக்சிங் தாகூர், இணை மந்திரி நிசித் பிரமானிக், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்கின்றனர். இரவு 7.45 மணிக்கு விழா நிறைவு பெறுகிறது.

**அனுமதி சீட்டுகள்!**

6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு 2023 தமிழ்நாடு போட்டிகளை பார்வையாளர்கள் நேரில் காண்பதற்கு பிரத்யேக அனுமதி சீட்டுகளை வழங்க தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023, தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய 4 மாவட்டங்களில் வரும் ஜனவரி 19 முதல் 31 வரை நடைபெற உள்ளன. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து, 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் சுமார் 6000க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர், வீராங்கனைகளும் 1600க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்க உள்ளனர்.

மேலும், 1000க்கும் மேற்பட்ட நடுவர்கள் மற்றும் 1200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இந்த ஆண்டு 27 பிரிவுகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. ஸ்குவாஷ் அறிமுக விளையாட்டாக இடம் பெறுகிறது. இதில் தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் டெமோ விளையாட்டாக (Demo Sports) இடம்பெற உள்ளது.

இப்போட்டிகளை விளையாட்டு ஆர்வலர்கள், பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் நேரில் பார்வையிட வசதியாக அனுமதி சீட்டுகளை வழங்க தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது. இப்போட்டியை நேரில் காண விரும்பும் பார்வையாளர்கள் TNSPORTS (ஆடுகளம்) என்ற செயலியின் மூலமாகவும் மற்றும் https://www.sdat.tn.gov.in என்ற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளம் வாயிலாக தங்களது விவரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இதில் போட்டி நடைபெறும் மாவட்டம், விளையாட்டு மற்றும் தேதியை தேர்வு செய்து பதிவு செய்ய வேண்டும். பின்னர் தங்களது அனுமதி சீட்டை பதிவிறக்கம் செய்து பயன்படுத்த வேண்டும். நேரில் போட்டியை காண்பதற்கு செல்லும் போது பதிவிறக்கம் செய்த அனுமதி சீட்டினை அலை பேசியிலோ அல்லது அச்சிடப்பட்ட தாளிலோ கொண்டு செல்ல வேண்டும்.

### உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர்

# ஜல்லிக்கட்டு போட்டி! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

## அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் பரிசுகள் வழங்கினார்!

*மதுரை, ஜன 19-*

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் தமிழர் திருநாளாம் தை திருநாள், தமிழ் புத்தாண்டை முன்னிட்டு நடைபெற்ற தமிழர்களின் வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பச்சை கொடியசைத்து துவங்கி வைத்தார். சுமார் 5 மணி நேரத்திற்கு மேலாக பார்த்து, மகிழ்ந்து, ரசித்து, பாராட்டி சிறந்த காளைகளுக்கும் மாடுபிடி வீரர்களுக்கும் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் தங்க மோதிரங்கள், தங்க காசுகள், பைக் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை வழங்கினார்.

உலக புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு தமிழர்களின் பாரம்பரியத்தை நினைவு கூரும் வீரவிளையாட்டுப் போட்டியாகும். இந்த சிறப்புமிக்க போட்டியை கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பத்திரபதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் பச்சை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் உயர்கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், கால்நடை மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, ஆ.தமிழரசி, ஆ. வெங்கடேசன், பூமிநாதன், தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் உள்ளிட்ட கழகத்தினர் அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்க தொடர்ந்து ஜல்லிக்கட்டு போட்டியில் முதலில் கிராம கோவில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. மேலும் மதுரை, திண்டுக்கல், தேனி, திருச்சி, விருதுநகர் என தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பதிவு செய்யப்பட்ட 1,200 காளைகளும் பங்கேற்றன. மாடு பிடி வீரர்கள் 700 பேர் பல சுற்றுகளாக பங்கேற்றனர். சீறிப்பாய்ந்த காளைகளும், திமில் மீது பாய்ந்து மடக்கி பிடித்த வீரர்களின் செயல்களும் காண்போர் அனைவரையும் பிரம்மிக்க வைத்தது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 5 மணி நேரத்துக்கும் மேலாக ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டியை பார்த்து மகிழ்ந்தார். வெற்றிபெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கும் வெற்றிபெற்ற மாடுபிடி வீரர்களுக்கும் கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உருவம் பொறித்த தங்க மோதிரங்கள் தங்ககாசுகள் அதே போன்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உருவம் பொறித்த தங்க மோதிரங்கள் தங்க காசுகள் வழங்கி பாராட்டினார், மற்றும் டிவி, மிக்சி, கட்டில் மெத்தை உள்ளிட்ட விலையுயர்ந்த சைக்கிள் என ஏராளமான பொருட்கள் பரிசு மழையாக வழங்கப்பட்டது.

ஜல்லிக்கட்டு விளையாட்டுப் போட்டியில் அதிக காளைகளை பிடித்து வெற்றிகண்ட வீரருக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டு களத்தில் என்னை வெற்றி காண முடியுமா என சவால் விடுவது போன்று சீறிப்பாய்ந்து வெற்றிகண்ட சிறந்த காளைக்கும் முதல்பரிசாக கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாகவும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பாகவும் விலைஉயர்ந்த சொகுசு கார் பரிசாக வழங்கப்பட்டது. அதேபோன்று இரண்டாம் இடம் பிடித்த ஜல்லிக்கட்டு காளைக்கும், மாடுபிடி வீரருக்கும் தலா ஒரு மோட்டார் பைக் வழங்கப்பட்டது.

உலக புகழ்பெற்ற இந்த அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை காண அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், மலேசியா, டென்மார்க் உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளிலிருந்து வந்த வெளிநாட்டவர் தமிழர்களின் வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டை நேரில் கண்டு வியப்புடன் புகைப்படம் மற்றும் ஒளிப்பதிவு எடுத்து மகிழ்ந்தார்கள். இதேபோல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த பார்வையாளர்கள் பார்த்து மகிழ்ந்தார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகள் சுகாதாரம் குடிநீர் சுகாதார வசதி இருக்கை வசதிகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் திரைப்பட நடிகர்கள், முக்கிய பிரமுகர்கள், அரசு அதிகாரிகள், விழா குழுவினர், பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மதுரை மாவட்ட நிர்வாகம் மற்றும் விழாக்குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

## ஒன்றிய - மாநில உறவுகளுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்!

# “ஒரே நாடு - ஒரே தேர்தல்” திட்டத்தைக் கைவிடுக!

## தி.மு.க. எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றிய அரசின் உயர்நிலைக் குழுவிற்குக் கடிதம்!

**சென்னை, ஜன. 19 -**

**அரசியல் சட்டத்திற்கும் அச்சட்டம் தந்த கூட்டாட்சித் தத்துவத்திற்கும் எதிராக ஒன்றிய மாநில உறவை மட்டுமின்றி, ஒன்றியத்திற்கே பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் “ஒரே நாடு ஒரே தேர்தல்” திட்டத்தை கைவிடு! அதிகார வரம்பற்ற விசாரணை நடத்தும் உயர்நிலைக்குழு - அதிகாரப் பசி கொண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு துணை போகாமல் தனது விசாரணையை நிறுத்திக் கொள்ள வேண்டும்! என்று ‘ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு’ தி.மு.க. எதிர்ப்பு தெரிவித்து, உயர்நிலைக் குழுவிற்கு கடிதம் எழுதியுள்ளது.**

இது குறித்து தி.மு.க. சார்பில் எழுதப்பட்டுள்ள கடிதம் வருமாறு:-

“ஒரே நாடு ஒரே தேர்தல்”தொடர்பான பொருள் மீதான கருத்துக் கேட்பு சம்பந்தமாக, திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய நிலைப்பாட்டையும், எதிர்ப்பையும் கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறது.

I) முன்னுரை:

ஏற்கனவே 23.12.2022 அன்று சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்ட சபைகளுக்கு தேர்தல் நடத்துவது குறித்த தி.மு.க.வின் கருத்துக்களை கோரியது. இதற்கு தி.மு.க. தன்னுடைய 12.1.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக “ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு” எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதற்குப்பிறகு நேரடிவிசாரணைக்கு எவ்வித தகவலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அனுப்பப்படவும் இல்லை. அந்த சட்ட ஆணையத்தின் கருத்துக் கேட்பு தொடர் நடவடிக்கையும் என்னவென்று தெரியவில்லை.

இதில் கவனிக்கத் தக்க முக்கிய அம்சம் என்னவென்றால், 2022ல் சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் பாராளுமன்றம் மற்றும் மாநில சட்ட சபைகளுக்கு தேர்தல் நடத்துவது சம்பந்தமாகத்தான் ஆலோசனைகளைக் கோரியது. ஆனால், தற்பொழுது ஒன்றிய அரசு இதை விரிவு படுத்தி நாடாளுமன்ற மற்றும் மாநில சட்ட சபைகளோடு, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் இணைத்து ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் விதமாக ஆய்வு வரம்புகளை வெளியிட்டுள்ளது. இந்தச் செயல் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராகவும், குடியரசு தலைவர் முறையிலான ஆட்சியை நோக்கியும் செல்வதாகும்.

**உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டதே செல்லாது!**

II) ஒன்றிய அரசால் நிய மிக்கப்பட்ட உயர்மட்ட குழு துவக்கத்தி லிருந்தே சட்டவிரோதமானதும் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட உயர் மட்டக் குழுவானது, அரசியலமைப்பு பிரிவு 73 ன் கீழ் ஒன்றிய அரசுக்கு அளிக்கப்பட்ட நிர்வாக அதிகாரத்தின் மூலம் அமைக்கப்பட்டதாகும். ஒன்றிய அரசின் நிர்வாக அதிகாரம் என்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கு உயர்வானது அல்ல. சட்டமியற்றும் அதிகாரம் உள்ளவற்றில் மட்டும்தான் நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க முடியும் என்று வகுத்துள்ள அரசியல் சட்டத்திற்கு விரோதமானதாகும் என்பதால் இந்த உயர் நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளதே செல்லாத ஒன்றாகும். மாநில அரசின் பட்டியலில் உள்ள நகராட்சிகள், பஞ்சாயத்துகளின் தேர்தல் நடைமுறை பற்றி விசாரிக்க ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டுள்ள இந்த உயர்நிலைக்குழுவிற்கு அதிகாரமில்லை என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டவட்டமான கருத்தாகும். அது மட்டுமின்றி இந்த உயர்நிலைக்குழு சட்டவிரோதமானது. அரசியல் சட்டத்திற்கு புறம்பானது.

**நடைமுறை சாத்தியமற்றது!**

III) நாடாளுமன்றம் மற்றும் சட்ட சபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது பின்வரும் காரணங்களினால் சாத்தியமற்றது என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறது.

- ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற முறை முற்றிலுமாக நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்று. அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்திற்கு எதிரானது. அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள “சுதந்திரமான, நேர்மையான” தேர்தலுக்கு முற்றிலும் எதிரானது. அரசியல் சட்டத்திற்கு விரோதமானது.

**ஜனநாயக நடைமுறையை பலவீனப்படுத்தும்!**

- ஒரே நேரத்தில் தேர்தல் என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்றங்களை முன் கூட்டியே கலைக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்பதாலும் அப்படி கலைப்பது அரசியல் சட்டவிரோதம் என்பதாலும் இந்த நடைமுறையை திமுக எதிர்க்கிறது.
- ஒன்றிய ஆளுங்கட்சியும் மெஜாரிட்டியை இழந்தால் ஆட்சி கவிழும். அது போன்ற நிகழ்வில் ஒரே நேரத்தில் தேர்தல் என்ற முன்னெடுப்பிற்கு மீண்டும் இடையூறு ஏற்படும் என்பதைக் கூட ஆலோசிக்காமல் “ஒரே நாடு ஒரே தேர்தல்” முயற்சி நடப்பது நடைமுறை சாத்தியமற்றது.

**கட்டுக்கடங்காத செலவீனத்தை ஏற்படுத்தும்!**

- ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் தேர்தல் என்பது அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்திற்கு எதிரானது. அச்சட்டம் வகுந்து தந்துள்ள மத்திய மாநில உறவு அடங்கிய கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. ஜனநாய நடைமுறையை பலவீனப்படுத்துவதாகும்.
- ஒரே நேரத்தில் தேர்தல் என்பது தேசியக் கட்சிகளுக்கும் மாநில கட்சிகளுக்கும் இடையே தேர்தல் களத்தில் சம நிலையிலான போட்டியை ஏற்படுத்தி தராது.
- உள்ளாட்சித் தேர்தல், சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த முயற்சிப்பது எழுத்தறிவு இன்னும் பெற வேண்டிய கிராமப்புற மக்கள் மத்தியில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

**ஒன்றிய -மாநில அரசுகளின் உறவுக்கு அச்சுறுத்தலாகும்!**

- ஒரே நேரத்தில் தேர்தல் என்றால் அதை எதிர்கொள்ள தேர்தல் ஆணையத்திற்கு தேர்தல் ஆணையர் எண்ணிக்கை, உள்கட்டமைப்பு எல்லாம் இப்போது இருப்பது போல் 10 மடங்கு உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும். தேர்தல் அதிகாரிகளின் எண்ணிக்கை இப்போது இருப்பதை விட 3 முதல் 5 மடங்கு அதிகரிக்க வேண்டும் என்பதால் கட்டுக்கடங்காத செலவினத்தை ஏற்படுத்தும் என்பதால் இது நடைமுறை சாத்தியமற்றது.
- நகராட்சிகளும், பஞ்சாயத்துகளும் மாநில அரசின் நிர்வாக அமைப்புகள் என அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவை. ஆகவே இவற்றுக்கும் சட்டமன்றம், நாடாளுமன்றத்துடன் தேர்தல் என்பது அரசியல் சட்ட விரோதமானது. இத்தேர்தல் முழுக்க முழுக்க மாநில அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருப்பதாகும்.
- ஒரே நேரத்தில் நகராட்சி, பஞ்சாயத்து, சட்டமன்றம், நாடாளுமன்ற தேர்தலை நடத்த தேர்தல் ஆணையத்திடம் போதிய வாக்குப் பதிவு இயந்திரங்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கே பல லட்சம் கோடி ரூபாயை செலவிட வேண்டிய நிதிச் சுமை தேர்தல் ஆணையத்திற்கு ஏற்படும் என்பதால் இந்த தேர்தல் நடைமுறையால் நிதி சிக்கனம் ஏற்படாது.
- ஒரே நேரத்தில் தேர்தலைத் திணிப்பதற்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது மாநில உரிமை மற்றும் அரசியல் சட்டத்தால் மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பறிப்பதாகும். இது ஒன்றிய - மாநில அரசு உறவுகளில் மட்டுமல்ல; ஒன்றியத்திற்கே கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்து மிக்க முயற்சி.
- ஒன்றிய மாநில அரசு உறவுகளுக்கும், ஒன்றியத்திற்குமே அச்சுறுத்தலாக இருக்கும் இது போன்ற தேர்தல் நடைமுறை பற்றிய முடிவினை உயர்நிலைக்குழு விளையாட்டாக எடுத்து அதிகாரப் பசியுடன் இருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை திருப்திப்படுத்த நினைக்க கூடாது.
- அனைவருக்கும் சம வாய்ப்பு வழுங்கும் அரசியல் சட்டத்தை நமது அரசியல்சட்டத்தை உருவாக்கியவர்கள் சிந்தித்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அரசியல் சட்டத்தை சிதைக்கவோ உருமாற்றவோ, விரைவில் மக்களால் நிராகரிக்கப்படும் நாடாளுமன்ற மெஜாரிட்டி உள்ளோரின் சுய நலத்திற்கு உயர்நிலைக் குழு துணை போகக் கூடாது.

**உயர்நிலைக்குழு தனது விசாரணையை நிறுத்திக் கொள்ள வேண்டும்!**

இறுதியாக, மேற்குறிப்பிட்ட அனைத்து காரணங்களினால் நாடாளுமன்றம், சட்டமன்றம், நகராட்சிகள், பஞ்சாயத்து ஆகியவற்றிற்கு “ஒரே நாடு, ஒரே தேர்தல்” என்ற நடைமுறையை மிக கடுமையாக எதிர்க்கிறது. ஆகவே உயர்நிலைக்குழு இது தொடர்பான தனது விசாரணையை நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் இல்லையென்றால் திராவிட முன்னேற்றக் கழகம் சட்டத்தின் வழி கொண்டு பொருத்தமான நடவடிக்கையை எடுக்கும் எனத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தி.மு.க. சார்பில் எழுதப்பட்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

> **“2022ல் சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் பாராளுமன்றம் , மற்றும் மாநில சட்ட சபைகளுக்கு தேர்தல் நடத்துவது சம்பந்தமாகத்தான் ஆலோசனைகளைக் கோரியது. ஆனால், தற்பொழுது ஒன்றிய அரசு இதை விரிவுபடுத்தி பாராளுமன்ற மற்றும் மாநில சட்ட சபைகளோடு, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் இணைத்து ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் விதமாக ஆய்வு வரம்புகளை வெளியிட்டுள்ளது. இந்தச் செயல் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராகவும், குடியரசு தலைவர் முறையிலான ஆட்சியை நோக்கியும் செல்வதாகும்.”**

### சட்டமன்றங்களை முன்கூட்டியே கலைக்க வேண்டிய சூழல் ஏற்படும்!

---

## 2 லட்சம் உயிர்களை காப்பாற்றிய ‘இன்னுயிர் காப்போம் திட்டம்!’

### ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 19-

‘2 லட்சம் உயிர்களை காப்பாற்றியுள்ளது இன்னுயிர் காப்போம் திட்டம்’ என்று “தினத்தந்தி” நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து 18.1.2024 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் மிக அதிகமாக சாலை விபத்துகள் நடக்கின்றன. விபத்துகளால் உயிரிழப்புகளும் அதிகமாக ஏற்படுகின்றன. விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க முதல் ஒரு மணி நேரம் ‘தங்க நேரம்’ என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், ஒரு மணி நேரத்துக்குள் மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளித்துவிட்டால், உயிரைக் காப்பாற்றிவிடலாம். இதற்காக நெடுஞ்சாலைகளில் 108 ஆம்புலன்சுகள் ஆங்காங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நெடுஞ்சாலையோரம் அரசு மருத்துவமனைகள் இருக்க வாய்ப்பில்லை. ஆனால், தனியார் மருத்துவமனைகள் நிறைய இருக்கும்.


தலையங்கம்
தினத்தந்தி
18.1.2024 (வியாழக்கிழமை)
2 லட்சம் உயிர்களை காப்பாற்றிய இன்னுயிர் காப்போம் திட்டம்!

விபத்து நடந்தவுடன் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்பவர்களுக்கு தமிழக அரசு ரூ.5 ஆயிரமும், மத்திய அரசாங்கம் ரூ.5 ஆயிரமும் ஊக்கத்தொகையாக வழங்குகிறது. விபத்தில் சிக்கும் எல்லோருமே வசதி படைத்தவர்களாக இருக்கமுடியாது. அரசு மருத்துவமனையை தேடி அழைத்து செல்வதற்குள் சில மணி நேரம் காலம் கடந்துவிடுகிறது.

இத்தகைய சூழ்நிலையில், கடந்த 18.11.2021 அன்று முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் சாலை பாதுகாப்பு குறித்தும், சாலை விபத்துகளை குறைப்பது குறித்தும், சாலை விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புகளை தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு நடத்தினார்.

அப்போது சாலை விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, முதல் 48 மணி நேரத்துக்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில், ‘இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48’ என்ற திட்டத்தை செயல்படுத்த ஆணையிட்டார்.

அந்த ஆணையில், முதல்-அமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை உள்ளவர்கள், இல்லாதவர்கள், பிற மாநிலத்தவர், வேற்று நாட்டவர் என அனைவருக்கும் தமிழக எல்லைக்குள் ஏற்படும் சாலை விபத்துகளில் காயமடையும் நேரத்தில், முதல் 48 மணி நேர சிகிச்சைக்காக ரூ.1 லட்சம் அரசே வழங்கும் என்று கூறப்பட்டுள்ளது.

ஆணை பிறப்பித்த ‘ஒரு மாதத்துக்குள், அதாவது 2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ந்தேதி மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில், இந்த ‘இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48’ திட்டத்தை முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்தார்.

இந்த திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் உள்ள 237 தனியார் மருத்துவமனைகள், 455 அரசு மருத்துவமனைகள் என 692 மருத்துவமனைகளில், சாலை விபத்துகளில் சிக்கியவர்களுக்கு முதல் 48 மணி நேரம் சிகிச்சை அளிக்க அரசு சார்பில் ரூ.1 லட்சம் தரப்படுகிறது. இது ஒரு மகத்தான திட்டம். இத்திட்டம் அமலுக்கு வந்த பிறகு, ஏற்பட்ட முதல் விபத்தில் சிக்கியவர் ஆதிபராசக்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நேரத்திலும், 50வது பயனாளியை சித்தல பாக்கத்திலும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

விபத்தில் சிக்கிய 2 லட்சமாவது பயனாளியும், 2 லட்சத்து ஒன்றாவது பயனாளியும் சென்னை ரேலா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தனர். அவர்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சந்தித்து உடல் நலம் விசாரித்தார். ரேலா மருத்துவமனை ஒரு பெரிய தனியார் மருத்துவமனை. அந்த மருத்துவமனையிலும் சிகிச்சை பெற இந்த திட்டம் உதவுகிறது.

2 ஆண்டுகளில் 2,09,078 உயிர்களைக் காப்பாற்றிய இந்த திட்டம் ஒரு மகத்தான கருணை திட்டம். எவ்வளவு உதவிகள் செய்தாலும் ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்கு இணை எதுவும் கிடையாதுஎன்ற வகையில், இது ஒரு ஈடு இணையற்ற திட்டம்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---

### கழக இளைஞர் அணி 2வது மாநாடு

## சேலத்தில் மாநாட்டுப் பணிகளை அமைச்சர் கே.என்.நேரு பார்வையிட்டார்!

### எஸ்.ஆர்.சிவலிங்கம் - இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. - டி.எம்.செல்வகணபதி பங்கேற்பு!

சேலம், ஜன. 19 -

சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள பெத்தநாயக்கன் பாளையத்தில் தி.மு.க.வின் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு வருகிற 21ஆம் தேதி நடைபெறுகிற தையொட்டி மாநாட்டு பணிகள் முழுமையாக நிறைவடையும் தருவாயில் உள்ளது.

அதனை தமிழ்நாடு நகராட்சி நிர்வா கத்துறை அமைச்சரும், தி.மு.க. முதன்மைச் செயலாளரும், இளைஞரணி மாநாட்டின் ஒருங்கிணைப்பாளருமான கே.என். நேரு, திடலில் 4 கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று பார்வையிட்டு மாநாட்டு பணிகள் குறித்து உயர்மட்டக் குழுவினருடன் ஆலோசித்தார்.

இதேபோல் தமிழ்நாடு வீட்டு வசதி துறை வாரிய மற்றும் மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி மாநாட்டு திடலை பார்வையிட்டார். அப்பொழுது பந்தல் அமைக் கும் பணியில் ஈடுபட்டு வரும் தஞ்சை சிவாவிடம் வேலைபாடுகளை அமைக்கும் பணியும் மேலும் ஹரியானாவில் இருந்து வரவழைக்கப்பட்ட திடலில் கீழே போடப்படும் பாய்களையும் பார்வையிட்டார்.

பின்னர் இதுகுறித்து பந்தல் சிவாவிற்கு சில ஆலோசனைகளை வழங்கினார். மேலும் மழை நீர் தேங்காதவாறு பந்தல் பகுதியில் நான்கு கால்வாய்கள் அமைக்கப்பட்டு பல லட்சம் செலவில் ஏற்பாடு செய்துள்ளனர். குறிப்பாக மழை எவ்வளவு அதிகமாக பெய்தாலும் அதனை உடனடியாக தொட்டியில் விட ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

மேலும் இந்த மாநாடு ஒன்பது லட்சம் சதுர அடியில் 1.5 லட்சம் பேர் இருக்கைகள் கொண்ட மாநாடு திடல் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சமையல் கூடத்தில் 5 லட்சம் சதுர அடியில் உணவருந்த கூடம் அமைக்கப்பட்டு அதிலும் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அமர்ந்து உண்ணும் அளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது இதனை கின்னஸ் சாதனை படைப் பதற்காக அதற்கான பதிவை டெல்லியில் இருந்து சிறப்பு குழுவினர் வந்து நேற்று பதிவு செய்து கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் தற்பொழுது மாநாட்டு பணிகள் நிறைவடைந்து இருக்கை போடும் பணியும் நடைபெற்று வருகிறது. அதனை பார்வையிட்டு சில ஆலோசனைகளை வழங்கினார்.

பின்னர் இந்த மாநாடு தென்னிந்திய வரலாற்றில் அதிக பரப்பளவு கொண்ட திடலாக அமைந்துள்ளதால் இந்த மாநாடு குறித்து உலக சாதனைக்காக பதிவு செய்துள்ளனர். இந்த சாதனை அதிக பரப்பளவில் முதல் முறையாக மாநாடு அமைந்துள்ளதால் கின்னஸ் சாதனையில் இடம் பெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது அதற்கான முன்னேற்பாடுகளையும் செய்து வருகின்றனர் இதனை அமைச்சர் நேரு மூன்று மாவட்ட செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார். மாநாடு திடல் வேலைப்பாடுகள் ஆரம்பித்ததில் இருந்து இதுவரையிலும் அமைச்சர் கே.என்.நேரு தினந்தோறும் மாநாட்டு திடலில் நடந்து சென்ற தூரம் 100 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் இரா. ராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி.எம். செல்வகணபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர். தஞ்சை மாவட்ட செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., பாரப்பட்டி சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட பொருளாளர் ஆத்தூர் ஸ்ரீராம், மு.ரா.கருணாநிதி, ஏ.ஏ. ஆறுமுகம், டாக்டர் தருண் உள்பட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

---

## ஈகிள் பிரஸ் நிறுவனர் பிரதாப் சிங் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, ஜன. 19-**

**ஈகிள் பிரஸ் நிறுவனர் பிரதாப்சிங் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.**



கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

ஈகிள் பிரஸ் நிறுவனர் பிரதாப் சிங் அவர்கள் மறைந்தார் என்ற செய்தி கேட்டு வருந்தினேன். தலைவர் கலைஞரோடும் எங்கள் குடும்பத்தோடும் நட்பு பாராட்டிய அவரது இழப்பு வேதனை தருகிறது.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட தமிழ் ஆளுமைகளின் நூல்களை வெளியிட்டுப் பூம்புகார் பதிப்பகத்தைத் தமிழ்க் கருவூலமாக நடத்தியவர் பிரதாப் சிங் அவர்கள்.

அவரது பிரிவால் வாடும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது மகனும், எனது இனிய நண்பருமான ராஜா சுந்தர்சிங் அவர்களுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்டேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.




ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி , உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப்போட்டி 2023 ஜோதியினை மாவட்ட விளையாட்டு அலுவலரிடம் வழங்கினார்கள். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மரு.எ.பிரதீப், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்தராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் ராஜப்பா, திண்டுக்கல் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் சேகர், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் கமலக்கண்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், மாவட்ட கல்வி அலுவலர் கே.சி.சுதாகர், மாவட்ட விளையாட்டு அலுவலர் கா.கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்டம் - சிராவயலில் மஞ்சுவிரட்டு!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்!

*சிவகங்கை, ஜன. 19 -*

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட சிராவயலில் ஆண்டு தோறும் தை மூன்றாம் தேதி மஞ்சுவிரட்டு நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு நேற்று முன்தினம் தைமாதம் 3ம்தேதி 17ஆம் தேதி மஞ்சுவிரட்டு நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்ற மஞ்சுவிரட்டினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

272 மாடுகள் 81 மாடு பிடி வீரர்கள் கலந்து கொண்டார்கள். மாட்டினை அடக்கிய வீரர்களுக்கு பல்வேறு பரிசுகளை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்கினார். ஆம்புலன்ஸ் வசதியுடன் தயாரான நிலையில் 8 மருத்துவ குழுவினர் இருந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கார்த்தி ப.சிதம்பரம், எம்.பி.எஸ். மாங்குடி எம்.எல்.ஏ., தேவகோட்டை கோட்டாட்சியர் பால்துரை, தாசில்தார் ஆனந்த், மஞ்சுவிரட்டு ஒருங்கிணைப்பாளர் சிராவயல் வேலுச்சாமி அம்பலம், ஒன்றியக் கழகச் செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன், துணைச் செயலாளர் முத்துக்குமார் உட்பட பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக மாடுபிடி வீரர்கள் உறுதிமொழியை எடுத்து கொண்டார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ப.க.அரவிந்த் உத்தரவின் பேரில் திருப்பத்தூர் டி.எஸ்.பி. ஆத்மநாதன் தலைமையில் 1000த்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

தமிழகம் முழுவதிலும் இருந்து காளைகள் மஞ்சுவிரட்டில் பங்கேற்றது.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

# இன்று முதல் ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் வேண்டுகோள்!



*தூத்துக்குடி, ஜன. 19 -*

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல் மக்கள் நலம் பேணும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48, நான் முதல்வன், முதல்வரின் முகவரி போன்ற பல்வேறு நல்ல திட்டங்களின் வரிசையில் தற்போது ”மக்களுடன் முதல்வர்” எனும் புதிய திட்டத்தை தொடங்கியுள்ளார்.

இந்த திட்டத்தின்படி பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய்த்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை, சமூக நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டுக் கழகம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மின்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை. சிறு, குறு, நடுத்தரத் தொழில்துறை உள்ளிட்ட அத்தியாவசிய துறைகளின் அதிகாரிகள் ஒரே இடத்தில் கலந்து கொள்ளும் வகையில் சிறப்பு முகாம்கள் நடைபெறும்.

இத்திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.12.2023 திங்கட்கிழமை அன்று கோவையில் தொடங்கி வைத்தார்.

அன்றைய தினமே, தமிழகத்தின் அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளிலும் முகாம்கள் நடைபெற்றது. தூத்துக்குடி மாநகராட்சியில் மட்டும் மழை வெள்ளம் காரணமாக இம்முகாம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்சமயம் மழை வெள்ள பாதிப்பு சீர டைந்துள்ளதால் மீண்டும் இம்முகாம் நடைபெற இருக்கிறது. அதன்படி தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 22,26,27,28,39 ஆகிய வார்டு பகுதிகளுக்கு தூத்துக்குடி அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் இன்று (19.01.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில், (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன்) நான் இந்த முகாமினை தொடங்கி வைக்கிறேன். அன்றைய தினமே தூத்துக்குடி மாநகராட்சியின் 4,11,12,13,14,20,21 ஆகிய வார்டுகளுக்கு கந்தசாமிபுரம் ஆர்.சி. பெத்தானி நடுநிலைப் பள்ளியிலும், 34,35,51 ஆகிய வார்டுகளுக்கு மில்லர்புரம் செயிண்ட் மேரீஸ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், 51 வது வார்டுக்கு உட்பட்ட காதர்மீரான் நகர், ஊரணி ஒத்த வீடு, முடுக்குகாடு, வீரநா யக்கன்தட்டு மற்றும் 60 வது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு தெர்மல்நகர் கேம்ப் 1 ல் அமைந்துள்ள மாநகராட்சி துவக்கப்ப ள்ளியிலும் முகாம்கள் நடைபெறுகிறது.

20.01.2024 சனிக்கிழமை அன்று 29,36,37,38 ஆகிய வார்டுகளுக்கு சுப்பையா வித்யாலயம் மகளிர் மேல்நிலைப்பள்ளியிலும், 15,16 ஆகிய வார்டுகளுக்கு P&T காலனி லியோ மழலையர் பள்ளியிலும், 41,42,44, 43,45 ஆகிய வார்டுகளுக்கு காமராஜ் கல்லூரியிலும் முகாம்கள் நடைபெறுகிறது.

22.01.2024 திங்கள் கிழமை அன்று 5,6,9,10,23 ஆகிய வார்டுகளுக்கு செயிண்ட் தாமஸ் மெட்ரிக் பள்ளியிலும், 19,30, 31,32 வார்டுகளுக்கு டூவிபுரம் 2 வது தெருவில் உள்ள டி.என்.டி.ஏ நடுநிலைப்பள்ளியிலும், 48,49,50 வார்டுகளுக்கு கால்டுவெல் காலனியில் நடுநிலைப் பள்ளிகளிலும் முகாம்கள் நடைபெறுகிறது.

23.01.2024 செவ்வாய்க் கிழமை அன்று 24,25 ஆகிய வார்டுகளுக்கு குரூஸ்புரம் செயின்ட் ஜோசப் பள்ளியிலும், 7,8 ஆகிய வார்டுகளுக்கு ஆக்சிலியம் மேல்நிலைப்பள்ளியிலும், 17,18,33 ஆகிய வார்டுகளுக்கு மில்லர்புரம் பி.எம்.சி மேல்நிலைப்பள்ளியிலும், 52,53,54,59 ஆகிய வார்டுகளுக்கு முத்தையாபுரம் எஸ்.கே.எஸ் சங்கரம்மாள் திருமண மண்டபத்திலும் முகாம்கள் நடைபெறுகிறது.

24.01.2024 புதன்கிழமை அன்று 40,46,47 ஆகிய வார்டுகளுக்கு ரோட்டரி கிளப் இடத்தில் வைத்தும், 27.01.2024 சனிக்கிழமை அன்று 1,2,3 ஆகிய வார்டுகளுக்கு போல்பேட்டை தங்கம்மாள் நடுநிலைப்பள்ளியிலும், 55,56,57,58 ஆகிய வார்டுகளுக்கு முத்தையாபுரம் கீதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும் முகாம்கள் நடைபெறுகிறது.

இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின் கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும். எனவே, பொதுமக்கள் இம்முகாம்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருமங்கலம் அருகிலுள்ள முத்தப்பன்பட்டி சேடபட்டியார் திடலில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க, கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி 234 பெண்கள் சமத்துவப் பொங்கலிட்டு தமிழர் திருநாளை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் பல்வேறு தமிழ் கலாச்சார போட்டிகளுடன் சிறப்பாகக் கொண்டாடினர். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி சார்பில் சமத்துவப் பொங்கல் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவானது 17.01.2024 அன்று வடிவீஸ்வரம், தேர்மூடு பகுதியில் வைத்து நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி செயலாளர் துரை தலைமையில் நடைபெற்றது. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. ஹெலன் டேவிட்சன், மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் தில்லை செல்வம், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், மாநகர அவைத் தலைவர் பன்னீர்செல்வம் உட்பட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மாவட்ட அளவில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி!

# திண்டுக்கல் மாவட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள்!

## அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - அர.சக்கரபாணி வழங்கினர்!

*திண்டுக்கல், ஜன.19 -*

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி திண்டுக்கல் மாவட்ட அளவில் நடைபெற்றது விளையாட்டு போட்டிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி தலைமை வகித்தார் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர.சக்கர பாணி ஆகியோர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினர். மாவட்ட அளவில் நடைபெற்ற ஓவிய போட்டி, கட்டுரை போட்டி, திருக்குறள் போட்டி, பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற 30 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்ங்களை அறிவித்து, அதன் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் 2023ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 19.01.2024 முதல் 31.01.2024 வரை சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் கல்விக்கு மட்டுமில்லாமல் விளையாட்டிற்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தமிழகத்தில் உள்ள தலைசிறந்த விளையாட்டு வீரர்களை கௌரவப்படுத்தி வருகின்றார். மேலும், அனைத்து விளையாட்டு வீரர்களும் பல்வேறு போட்டிகளில் பங்கேற்க ஊக்கமளித்து வருகின்றார். இதன் காரணமாக விளையாட்டு துறையில் தலைசிறந்த மாநிலமாக தமிழகம் உள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் கால்பந்து, கபடி ஆகிய விளையாட்டு மிக சிறந்த மாவட்டமாக இருந்தது.

இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு எதிர் காலத்தில் இந்தியா அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவரவருக்கு விருப்பமான விளையாட்டில் தேர்வு செய்து, அவர்கள் பல விளையாட்டு களில் வெற்றி பெற்று திண்டுக்கல் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்திட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன் என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு மாமல்லபுரத்தில் செஸ் ஒலிம்பியாட் போட்டியில், 180 உலக நாடுகள் கலந்து கொண்ட போட்டியினை சிறப்பாக நடத்தப்பட்டது . இந்தியாவிலேயே தமிழகத்தில் செஸ் ஒலிம்பியாட் போட்டி நடத்திய பெருமை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. இந்த வகையில் தற்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக பொறுப்பேற்று இருக்கின்ற உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேசிய, மாநில, ஆசிய விளையாட்டு போட்டி மற்றும் பல்கலைக்கழக விளையாட்டு போட்டிகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத்தொகையும் வழங்கி சிறப்பு செய்து வருகிறார்கள்.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி என்பது இந்தியா முழுவதும் நடைபெற்று வருகிறது. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப்போட்டியினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இந்திய பிரதமர் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள். சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் விளையாட்டு போட்டிகள் ஒவ்வொரு பகுதிகளிலும் நடைபெற இருக்கிறது. அதன் தொடர்ச்சியாக அந்த போட்டி குறித்து மாவட்டம் முழுவதும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், என்ற நோக்கில் விழிப்புணர்வு வாகனம் தி ண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவுள்ளது. இந்த விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு எனது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறேன் என அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்தார்.

முன்னதாக, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.எ.பிரதீப், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்தராஜன், மாநகரச் செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதிபிரகாஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**த. முத்துராமலிங்கம்**
**சனவரி 19 (2019)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் – மாவட்ட கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**









கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டை முன்னிட்டு, சேலம் மாநாட்டுத் திடல் நோக்கிய சுடர் தொடர் ஓட்டத்தை சென்னை அண்ணா சாலையில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைகளுக்கு அருகே நேற்று காலை தொடங்கி வைத்தார். இந்தச் சுடர், சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம் மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் அணி தோழர்களால் மாநாடு நடைபெற இருக்கிற சேலம் பெத்தநாயக்கன்பாளையத்திற்கு கொண்டு சேர்க்கப்படவுள்ளது. சேலம் மாநாட்டுத்திடலில் நாளை (ஜனவரி 20ஆம் தேதி) மாலை இளைஞரணியின் மாநில துணைச் செயலாளர்களால் இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கப்படவுள்ள மாநாட்டுச் சுடர், கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.









திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.




**ஊர்கள் தோறும் தி.மு.க.** எனும்

தலைமைக் கழகத்தின் அறிவிப்பின்படி 100வது கொடியினை ஏற்றி வைத்து,
அரசு நலத்திட்டங்களை வழங்கி,

**திருச்சியில் 1000 பேருக்கும்,**
**தஞ்சையில் 1000 பேருக்கும்**

பட்டா வழங்குகின்ற நிகழ்ச்சிக்கு வருகை தரும்

கழக முதன்மைச் செயலாளர் – தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்

மாண்புமிகு. **கே.என்.நேரு** அவர்களை

விருதுநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் –தமிழ்நாடு வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்

மாண்புமிகு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்** அவர்களை

*வருக... வருக... என வரவேற்கிறோம்...*

**சு.கல்யாணசுந்தரம்** MP
தஞ்சாவூர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்

**துரை.சந்திரசேகரன்** MLA
தஞ்சாவூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர்

**கா.அண்ணாதுரை** MLA
தஞ்சாவூர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி** MCA.,

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் – தஞ்சாவூர் மாவட்ட பொறுப்பு அமைச்சர்

# திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க



விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கிய மைல் கல்லாக அமையவுள்ள Khelo India Youth Games, சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் இன்று தொடங்கவுள்ளது. இதனையொட்டி, மதுரையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு அரங்க மைதானத்தில் நடைபெற்று வரும் ஏற்பாட்டு பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். மேலும் பாதுகாப்பு வசதி, அடிப்படை சுகாதார வசதிகள், ஓடுதளம் பார்வையாளர் மாடம், வீரர்கள் தங்குமிடம் போன்றவற்றை மேம்படுத்துவதற்காக நடைபெறும் பணிகளை பார்வையிட்டு, அவை தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்தார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.வடிவேல் முருகன் இல்லத் திருமண விழா!

## கழக நிர்வாகிகள் வாழ்த்துகின்றனர்!

மதுரை, ஜன. 19 -

மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சருமான பி.மூர்த்தி மதுரை வடக்கு மாவட்ட கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.வடிவேல் முருகன் இல்லத் திருமண விழாவை தலைமையேற்று நடத்தி வைக்கிறார். இதில் கழக நிர்வாகிகள் திரளானோர் பங்கேற்க உள்ளார்கள், அதன் விபரம் :

மதுரை வடக்கு மாவட்டக் கழக செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சருமான பி.மூர்த்தி தலைமையில் அழகுநாச்சிபுரம் காலம் சென்ற ஏ.ராமு பிள்ளை, ஆர்.அழகம்மாள் மகன் வழி பேத்தியும், சோழவந்தான் காலம் சென்ற எஸ்.பி.ஆதிமூர்த்தி பிள்ளை, எ.பாண்டியம்மாள், பார்வதி மகள் வழி பேத்தியும் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மாவட்ட கவுன்சிலருமான ஆர்.வடிவேல் முருகன், வி.மாணிக்கவள்ளி ஆகியோரின் மகள் வி.ஷர்மிளாவுக்கும் திருப்பரங்குன்றம் காலம் சென்ற என்.பி.சதானந்த பிள்ளை, ருக்மணி அம்மாள் ஆகியோரின் மகன்வழி பேரனும், திருத்தங்கல் காலம் சென்ற எஸ்.தங்கராஜ் பிள்ளை, செண்பகவல்லி ஆகியோரின் மகள் வழி பேரனும் பி.எஸ். பாலச்சந்திரன், எஸ்.பி.மலர்க்கொடி தம்பதியின் மகனும் பொறியாளருமான எஸ்.பி பாலகுமாரன் திருமணம் வரும் 21.01.2024ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணிக்கு மேல் 12 மணிக்குள் மதுரை திருப்பரங்குன்றம் மூலக்கரை பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள கோபால்சாமி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருமண நிகழ்ச்சிக்கு மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடே சன், எம்.பூமிநாதன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதி ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளனர்.

மாநில இலக்கிய அணி துணை அமைப்பாளர் சி.நேருபாண்டியன், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா, மாவட்ட அவைத்தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் எம்.சோமசுந்தர பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கருத்தியாகராஜன், புதூர் சேகர், மாவட்ட துணைச் செயலாளர் வி.ஆசை கண்ணன், ரோகிணி பொம்மதேவன், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.பூமிநாதன், ஏ.முத்தையன், ஸ்ரீதர், செல்வராஜ், சுபைதா பேகம் அப்பாஸ், ஜெயக்குமார், மதுரை கிழக்கு ஒன்றிய சேர்மன் ஆர்.மணிமேகலை ராஜேந்திரன், மதுரை மேற்கு ஒன்றிய சேர்மன் மற்றும் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பி.வீரராகவன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

மேலும் மாநகராட்சி கொறடா சி.எம்.துரைப்பாண்டியன், கிழக்கு மண்டல தலைவர் வாசுகி சசிகுமார், மாமன்ற உறுப்பினர் களும், அரசு வழக்கறிஞர்களும், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக, செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர், தொழிலதிபர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பெரும் திரளானோர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

நிகழ்ச்சியில் ஒத்தக்கடை ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.முருகேஸ்வரி சரவணன் நன்றி கூறுகிறார்.

### ஏழைகளுக்காக அர்ப்பணிப்பு என்று பிரதமர் கூறுவது ஏமாற்று வேலை!


# அதானி - அம்பானிக்காகவே பா.ஜ.க. ஒன்றிய ஆட்சியை அர்ப்பணித்துள்ளது!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜன. 19 -

அதானி, அம்பானிக்காகவே பா.ஜ.க., ஒன்றிய ஆட்சியை அர்ப்பணித்திருக்கிறது. ஏழைகளுக்காக அர்ப்பணிப்பு என்று பிரதமர் கூறுவது ஏமாற்று வேலை என்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து 18.1.2024 தேதிய ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-



தீக்கதிர்

2024 ஜனவரி 18 வியாழக்கிழமை

நிழல்தரா வாய்ப்பந்தல்...

இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது; ஒன்றிய பாஜக அரசின் கடந்த 10 ஆண்டுகள் ஏழைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது எனப் பிரதமர் பேசி வருகிறார். ஆனால் உண்மை விபரங்கள், இது திட்ட மிட்டுக் கட்டமைக்கப்படும் வாய்ப்பந்தல் பொருளாதாரம் என்பதையே காட்டுகிறது.

இந்தியாவில் மூன்றாவது காலாண்டில் புதிய முதலீடு 46 சதவிகிதம் சரிவு ஏற்பட்டிருக்கி றது. எஃகு, சிமெண்ட், போக்குவரத்து சாதன

இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது; ஒன்றிய பா.ஜ.க. அரசின் கடந்த 10 ஆண்டுகள் ஏழைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது எனப் பிரதமர் பேசி வருகிறார். ஆனால் உண்மை விபரங்கள், இது திட்ட மிட்டுக் கட்டமைக்கப்படும் வாய்ப்பந்தல் பொருளாதாரம் என்பதையே காட்டுகிறது. இந்தியாவில் மூன்றாவது காலாண்டில் புதிய முதலீடு 46 சதவிகிதம் சரிவு ஏற்பட்டிருக்கிறது. எஃகு, சிமெண்ட், போக்குவரத்து சாதன உற்பத்தி 50 சதவிகிதத்திற்கு மேல் வீழ்ச்சியடைந்திருக்கிறது. ரயில்வே துறை முதலீட்டில் 92 சதவிகிதம் சரிவு ஏற்பட்டிருக்கிறது.

கடந்தாண்டு செப்டம்பர் மாதம் வரை வெளியாகியுள்ள விபரங்களின் படி நேரடி அந்நிய முதலீடு 38 பில்லியன் டாலரிலிருந்து 13 பில்லியன் டாலராகச் சரிவடைந்திருக்கிறது. 2022 - 23 நிதியாண்டில் 4 சதவிகிதமாக இருந்த வேளாண் துறையின் வளர்ச்சி, 2023 - 24 நிதியாண்டில் 1.8 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. இதில் எங்கே இருக்கிறது வளர்ச்சி?

கடந்த 20 ஆண்டுகளை விட நடப்பு நிதியாண்டின் நுகர்வு 4.4 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. இதன் தொடர்ச்சி உள்நாட்டுக் கிராக்கியைக் குறைத்து உற்பத்தியை தேக்கமடையச் செய்கிறது. முதலீடுகளின் அளவையும் குறைப்பதற்கு இட்டுச்செல்கிறது.

இதன் எதிரொலியாக மறுபுறம் வேலையின்மை அதிகரிக்கிறது. இது தான் இந்தியப் பொருளாதாரத்தின் உண்மை நிலை. இதனை தலைகீழாக மாற்றிச் சொல்வதால் வளர்ச்சியை உருவாக்க முடியாது. வளர்ச்சி என்ற வதந்தியைத்தான் உருவாக்க முடியும். இதையே மோடி முழு நேரமாக செய்து வருகிறார்.

இதற்கு ஏற்றவாறு நிதி ஆயோக், கடந்த 9 ஆண்டுகளில் 25 கோடிப் பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது. அப்படியென்றால் ஏன் உலக பட்டினி குறியீட்டு பட்டியலில் 125 நாடுகளில் இந்தியா 111 ஆவது இடத்தில் இருக்கிறது?

2014 முதல் 2022 வரையிலான எட்டு ஆண்டுகளில் நுகர்வுச் செலவுக் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. நுகர்வு செலவைக் கணக்கிடாமல் எப்படிக் கடந்த 9 ஆண்டுகளில் வறுமையிலிருந்து மீண்டவர்களைக் கணக்கெடுக்க முடிந்தது?

ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையைப் பயன்படுத்தி இந்தியா ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு கச்சா எண்ணெய்யை அதிகளவில் இறக்குமதி செய்தது. ஆனால் மக்களுக்கு விலையைக் குறைத்து விற்கவில்லை. மாறாக அம்பானி, அதானி உள்ளிட்ட பா.ஜ.க. கூட்டுக்களவாணி கார்ப்பரேட்கள் மூலம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது, ஏன் ? உண்மையில் கடந்த 10 ஆண்டு களாக அதானி, அம்பானிக்காகவே பா.ஜ.க. ஒன்றிய ஆட்சியை அர்ப்பணித்திருக்கிறது; பிரதமர் ஏழைகளுக்காக அர்ப்பணித்துள்ளதாக கூறுவது ஏமாற்று வேலை என்பதை நாடறியும். வாய்ப்பந்தல் ஒரு போதும் நிழல் தராது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு நெல்லை டவுன் வாகையடி முனை அருகில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவரின் சிலைக்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து 40 மாணவ, மாணவிகளுக்கு திருக்குறள் உரையுடன் கூடிய புத்தகம், டிபன் பாக்ஸ், நாட்குறிப்பு டைரி, எழுது பொருள்கள் அடங்கிய கிப்ட் பாக்ஸ் ஆகியவை தலா 1ம், கழகத் தோழர்களுக்கு கழக இரு வண்ண வேட்டியும், 30 தூய்மை பணியாளர்களுக்கு கைலி ஆகியவையும் வழங்கப்பட்டது. நிகழ்வில் சுப.சீதாராமன், மேயர் சரவணன், முருகன், விஜிலா சத்யானந்த், நவநீதன், அண்ணாதுரை, உலகநாதன், மீரான் மைதீன், டில்லி சம்சு, பத்மராஜ், வேல்முருகன், செந்தில் முருகன், ரேவதி அசோக், தேவிகா, நெல்லை முத்தையா, பிரிட்டோ, அலெக்சாண்டர், திராவிட மணி, பாம்பு கிருஷ்ணன், சூப்பர் மணி, ஜலீஸ் ரகுமான், குண்டு பாண்டியன், மணிகண்டன், பீர் முகமது, இஸ்மாயில்,காதர்ஒலி, அசன் கனி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாடு சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வரும் 21-ஆம் தேதி ஞாயிறு அன்று நடைபெற உள்ள நிலையில், மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டம், சென்னையிலிருந்து 18.01.2024 (வியாழக்கிழமை) காலை தொடங்கியது. சென்னை அண்ணா சாலை சிம்சன் சந்திப்பில் உள்ள பெரியார் சிலையிலிருந்து மாநாட்டுச் சுடர் ஓட்டத்தை, மாண்புமிகு அமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் காலை 7.00 மணி அளவில் தொடங்கி வைத்தார்.

மாநாட்டுச் சுடர் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி வழியாக 316 கிலோ மீட்டர் தூரம் பயணித்து சேலம் மாநாட்டுத் திடலைச் சென்றடைகிறது. இந்த மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டத்தில் அந்தந்த மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | இடம் / தொகுதி / மாவட்டம் | பங்கேற்போர் |
| --- | --- | --- | --- |
| 19.01.2024 | 12:15 AM | மதுராந்தகம் (பைபாஸ்), மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு. | **க.சுந்தர்** எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர், **வழக்கறிஞர் அ.யுவராஜ்** மாவட்ட அமைப்பாளர் காஞ்சிபுரம் தெற்கு. |
| 19.01.2024 | 3:15 AM | மேல்மருவத்தூர், மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு. | |
| 19.01.2024 | 4:15 AM | அச்சரப்பாக்கம், மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு. | |
| 19.01.2024 | 8:30 AM | திண்டிவனம் (பைபாஸ்), திண்டிவனம், விழுப்புரம் வடக்கு. | **மாண்புமிகு செஞ்சி கே.எஸ்.மஸ்தான்** மாவட்டச் செயலாளர், **க.ஆனந்த்** மாவட்ட அமைப்பாளர், விழுப்புரம் வடக்கு. |
| 19.01.2024 | 9:30 AM | மயிலம், மயிலம், விழுப்புரம் வடக்கு. | |
| 19.01.2024 | 12:30 PM | விக்கிரவாண்டி, விக்கிரவாண்டி, விழுப்புரம் தெற்கு. | **நா.புகழேந்தி** எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர், **செ.தினகரன்** மாவட்ட அமைப்பாளர், விழுப்புரம் தெற்கு. |
| 19.01.2024 | 2:20 PM | விழுப்புரம் (பைபாஸ்), விழுப்புரம், விழுப்புரம் தெற்கு. | |
| 19.01.2024 | 5:00 PM | அரசூர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி வடக்கு. | **தா.உதயசூரியன்** எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர், **எஸ்.அருணராஜ்** மாவட்ட அமைப்பாளர், கள்ளக்குறிச்சி வடக்கு. |
| 19.01.2024 | 9:30 PM | உளுந்தூர்பேட்டை, உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி வடக்கு. | |
| 19.01.2024 | 2:30 PM | தியாக துருகம், கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி தெற்கு. | **வசந்தம் க.கார்த்திகேயன்** எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர், **வி.பி.தாகப்பிள்ளை** மாவட்ட அமைப்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு. |
| 19.01.2024 | 4:10 AM | கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி தெற்கு. | |
| 20.01.2024 | 6:20 AM | சின்ன சேலம், சின்ன சேலம், கள்ளக்குறிச்சி தெற்கு. | |
| 20.01.2024 | 9:00 AM | தலைவாசல், கெங்கவள்ளி, சேலம் கிழக்கு. | **எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆர்.ராஜேந்திரன் டி.எம்.செல்வகணபதி** மாவட்டச் செயலாளர்கள், **வீரபாண்டி டாக்டர் ஆ.பிரபு மு.மணிகண்டன் சௌ.அருண் பிரசன்னா கேபிள் சரவணன்** மாவட்ட–மாநகர அமைப்பாளர்கள், சேலம். |
| 20.01.2024 | 11:00 AM | ஆத்தூர், ஆத்தூர், சேலம் கிழக்கு. | |
| 20.01.2024 | 1:30 PM | பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், சேலம் கிழக்கு. | |

தி.மு.க. இளைஞர் அணி
அன்பகம், சென்னை – 18
நாள் : 17.01.2024





2 ஆவது மாநில மாநாட்டுக்கு, மாநில உரிமை மீட்பு முழக்கமாக நடைபெறவுள்ள இளைஞர் அணி மாநாட்டுக்கான பாடலை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள், அண்ணா அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவச்சிலைகள் அருகே நேற்று முன்தினம் வெளியிட்டார். நிதி உரிமை – கல்வி உரிமை – மொழி உரிமை – வேலைவாய்ப்பு உரிமை என ஒட்டுமொத்தமாக நம் மாநில உரிமைகளை நிலைநாட்டிடும் வகையில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணி மாநாட்டின் லட்சியத்தை உணர்த்தும் வகையில் இம்மாநாட்டுப் பாடல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் அமைச்சர்கள் உள்பட கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

### எக்காலத்திலும் பண்பாட்டைக் காப்போம்!

# தமிழரின் வீரவிளையாட்டை ஊக்குவிப்போம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளப் பதிவு!

**சென்னை, ஜன.19 –**

**“எக்காலத்திலும் பண்பாட்டைக் காப்போம்! தமிழரின் வீரவிளையாட்டை ஊக்குவிப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழரின் வீர விளையாட்டான ஏறுதழுவல் குறித்து தமது சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளங்களில் பதிவிட்டிருப்பதாவது:

தமிழரின் வீரவிளையாட்டான ஏறுதழுவுதல் ஜல்லிக்கட்டு போட்டி 100க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்று, அதில் திமில் பெருத்த 66 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காளைகளை 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காளையர்கள் களத்தில் சந்தித்துள்ளனர்.

புழுதி பறந்த நிலத்தில் நடந்த பண்பாட்டு நிகழ்வை, சுமார் 3 இலட்சம் பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர். வெற்றி பெற்ற காளைகளும் - வீரர்களும் பரிசுகள் பெற்றார்கள்.

திராவிட மாடல் ஆட்சியில் பண்பாட்டின் அடையாளமாய் விளங்கும் ஏறுதழுவுதலுக்கென மதுரையில் மிகப் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ள “கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை” வரும் 24-ஆம் நாள் திறந்து வைத்து போட்டிகளைக் காண மதுரை, அலங்காநல்லூர் - கீழக்கரைக்கு வருகிறேன்.

தமிழரின் வீரவிளையாட்டை ஊக்குவிப்போம்! எக்காலத்திலும் பண்பாட்டைப் காப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளங்களில் பதிவிட்டுள்ளார்.

### சிவகங்கை மாவட்டத்தில் ஜல்லிக்கட்டுப் போட்டி:

# உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன. 19-

சிவகங்கை மாவட்டம், சிராவயல் ஊராட்சி - மஞ்சுவிரட்டுப் போட்டி நடைபெறும் இடத்திற்கு வெளியே நடைபெற்ற சம்பவத்தில் உயிரிழந்த இருவர் குடும்பத்திற்கு இரங்கல் மற்றும் நிதி யுதவி அளிக்க உத்தரவிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிராவயல் ஊராட்சியில் நேற்று முன்தினம் (17.01.2024) மஞ்சுவிரட்டுப் போட்டி நடைபெறும் இடத்திற்கு வெளியே நடைபெற்ற சம்பவத்தில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிராவயல் ஊராட்சி, மருதங்குடி கிராமத்தைச் சேர்ந்த முத்துமணி (வயது 32) மற்றும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கே.வளையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் பாஸ்கரன் (வயது 12) ஆகிய இருவரும் எதிர்பாராத விதமாக படுகாயம் அடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள் என்ற துயரமானச் செய்தியை கேட்டு மிகவும் வேதனையடைந்தேன்.

இவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு. உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### கழக இலக்கிய அணி துணைத் தலைவர்

# கவிச்சுடர் கவிதைப்பித்தன் தாயார் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 19-

கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் தாயார் லூர்து மேரி அவர்கள் நேற்று முன்தினம் (17.1.2024 - புதன்கிழமை) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை, தாயாரை இழந்து வாடும் கவிச்சுடர் கவிதைப் பித்தனுக்கும், அவர் தம் குடும்பத்தினருக்கும் தெரிவித்துள்ளார்.

### ஞாலம் உற்று நோக்கும் சேலம் மாநாடு! அமைச்சர்

# உதயநிதி அழைக்கிறார்! உணர்வுடன் புறப்படுவோம்!

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் முதலே, பொதுக்கூட்டங்கள், கருத்தரங்கங்கள், நாடகங்கள், எனது தனது கொள்கை முழக்கத்தை தொய்வின்றி செய்து வருகிறது.



ஊடக வலைத்தள வசதிகள் ஏதுமற்ற அந்நாளில் அண்ணா, கலைஞர், நாவலர், ஈ. வே. கி. சம்பத், பேராசிரியர், ஆசைத் தம்பி, மதியழகன், கண்ணதாசன் ( ஆரம்பத்தில் ) சத்திய வாணி முத்து என கழக முன்னணித் தலைவர்கள் தங்களது பத்திரிக்கை வாயிலாக கழகக் கொள்கைகளை பட்டி தொட்டியெங்கும் பரப்பி வந்தனர்.

கிளைக்கழகம், சிற்றூர், பேரூர், நகரம், பட்டிணக்கரையென சிறு அமைப்புகள், மன்றங்கள் மூலம் கழக சொற்பொழிவாளர்களைக் கொண்டு, சிறுமேடையமைத்து, கழகத்தை வளர்க்கவும், ஆழ வேர்பதியவும், அல்லும் பகலும் பாடுபட்டனர்.

இவற்றிற்கெல்லாம் மணிமுடியாய் அமைந்தது கழகத்தின் மாநில மற்றும் மாவட்ட மாநாடுகள் தான்.

ஆரம்ப நாட்களில் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா, அவர்களின் அடியொற்றித் தொடர்ந்து, தலைவர் கலைஞர் அவர்கள் கூட்டிய மாநாடுகளில், கழகத்தின் கொள்கைத் தங்கங்கள் தங்களது குடும்பத்தினருடன் நான்கு, ஐந்து நாட்கள் கலந்து கொண்ட வரலாறு திமுகவிற்கு மட்டுமே இன்றளவும் சொந்தம்.

கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து பலப்பல மாநாடுகள் நடந்தேறியுள்ளது. திமுக தேர்தலில் பங்கு பெற்று மக்களை சந்திக்கும் முன்னும், பின்னும் நடத்தப்பட்ட மாநாடுகள் தான் கழகத் தலைமைக்கும், கடைநிலைத் தொண்டனுக்கும் நெருக்கத்தை, பற்றை, பாசப்பிணைப்பை ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டில் அதிரடி மாற்றங்களும், ஆட்சி மாற்றங்களும் ஏற்படக் காரணமாக அமைந்தது.

அந்த அடிப்படையில் தான் தி.மு.கழகத்தை இந்திய ஒன்றியமே எதிர்நோக்கும் பரபரப்பான அரசியல் சூழலில் கழகத்தின் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்கள் அழைக்கிறார்! மாங்கனிநகராம் சேலத்தில் ஜனவரி 21 அன்று நடைபெறும் 2 வதுமாநில இளைஞரணி மாநாட்டிற்கு!!

2007 தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக வீற்றிருந்த காலத்தில் நெல்லையில் அன்றைய இளைஞரணிச் செயலாளர் தளபதியவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இன்று இதோ வாழையடி வாழையாய், வாய்மையுறு தமிழ்நிலம் காக்க வதைகள் ஏற்று, வாதைகளைப் பொறுத்துக் கொண்ட, உயிரனையத் தலைவர் கலைஞர், ஓங்கு புகழ் தளபதியவர்களின் வரிசையில் தன்னை ஒப்படைத்துக் கொண்ட இளைஞர்களின் இதயநிதி அழைக்கிறார்! சேலம் மாநகருக்கு.

ஆம். கழகத்தின் ஒவ்வொரு முக்கிய நிகழ்வுகளில் முதன்மை பெற்ற சேலம் மாநகரில் சிறப்புற நடைபெறவுள்ள மாநாட்டிற்கு அழைக்கிறார்.

1945 ல் திராவிடர் கழக பெயர் மாற்ற தீர்மானம் கொண்டு வந்து, அது அண்ணாதுரை தீர்மானம் என அறிவிக்கப்பட்ட திராவிடர் கழக மாநாடு நடைபெற்ற ஞாலம் போற்றும் சேலத்திற்கு அழைக்கிறார்! சிந்தைக்கு விருந்து பெற சிரத்தையுடன் புறப்படுவோம்.

1956 டிசம்பர் 29 ல் சேலத்தில் கூடிய கழகப் பொதுக்குழு 1957 பொதுத்தேர்தலில் கழகத்தின் சார்பில் 150 இடங்களில் கழகம் போட்டியிடுவதாகவும், வேட்பாளர்களை தேர்வு செய்ய கலைஞர் மு. கருணாநிதி, நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ. வே. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கே. ஏ. மதியழகன், உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்தல் அறிக்கையை கலைஞர் மு.கருணாநிதி, ஈ. வே.கி.சம்பத் இருவர் தேர்வு செய்யவும் பொதுக்குழு தீர்மானித்தது.

அந்த மாநாட்டில் தேர்தல் நிதி வேண்டி, கழகத்தோழர்களை, முன்னணியினரை, ஆதரவாளர்களை, கழக அனுதாபிகளை, கலைத்துறையினர் உள்ளிட்ட பலரின் ஆதரவு வேண்டும் எனப் பேசிய அண்ணா, அன்று பளிச்சென்று மின்னிய நட்சத்திரமான தலைவர் கலைஞரை, “ சற்று வித்தியாசமான நட்சத்திரம் தம்பி கருணாநிதி” அவர் இளம் வயதிலேயே திராவிட இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். எழுத்து, பேச்சு, உழைப்பு என மூன்றையும் கொண்டு இயக்கப் பணியில் தன்னை ஈடுபடுத்தி நம் கழக வளர்ச்சிக்காக அரும்பாடு படுபவர் எனப் பாராட்டி, அவரது பராசக்தி புதிய மாற்றத்தை ஏற்படுத்தி, கணேசன் என்னும் கலைஞனையும், எம். ஜி. ராம்சந்தரை மந்திரி குமாரி மூலமும் இயக்கத்தின் பால் ஈர்த்தவர் எனப் போற்றி பூரிப்பு கொண்டார்.

அத்தகு சிறப்பு மிகுந்த சேலம் செம்மாங்கனி நகருக்கு தான் நமது உதயநிதி அழைக்கிறார்.

சேலம் மார்டன் தியேட்டர்சில் ஜுபிடர் பிக்சர்ஸுக்காக அந்நாளைய உச்ச நட்சத்திரங்களைக் காட்டிலும் அதிகச் சம்பளத்தை தனது கனல் பறக்கும் வசனங்களுக்காகப் பெற்று, எம். ஜி. ஆர். சிவாஜிகணேசன் எனும் இரண்டு திரை ஆளுமைகளை தனது ஆற்றல் மிக்க வசனவீச்சால், தமிழ்நாட்டிற்குத் தந்த தலைவர் கலைஞரின் மூச்சு காற்றும், பேச்சுக் காற்றும் நிறைந்திட்ட எஃகு நகர் சேலத்திற்கு இரும்பு நிகர் நெஞ்சுரம் கொண்ட இளைஞர்களை அழைக்கிறார்.

உறவுக்கு கை கொடுப்போம். உரிமைக்கு குரல் கொடுப்போமென தான் வகுத்துக் கொண்ட அரசியல் நியதிக்காகவும், வீடு இருந்தால் தான் ஒடு மாற்ற முடியும் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் தேசப் பற்றினை மெய்ப்பிக்கும் வகையில் 70 களில் யுத்த நிதியாக இந்தியாவில் யாருமே அவ்வளவு நிதி தரவில்லை என்று சொல்லுமளவிற்கு அன்றைய பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்களை அழைத்து வந்து ஆறுகோடி ரூபாய் பெரும் நிதியை ஆறு தங்க மாங்கனிகளோடு தட்டில் வைத்து தந்த சேலம் பூமிக்கு நமது சிந்தை நிறைந்த இளைஞரணிச் செயலாளர் அழைக்கிறார்!

சேலம் உருக்காலை கொண்டு வந்து, எண்ணற்ற இளைஞர்களின் இல்லத்தில் ஒளிதந்த ஓய்வறியா உதயசூரியன் தலைவர் கலைஞரின் வழித்தோன்றல் அழைக்கிறார்.

ஈரோடு குருகுலத்தில் அரசியல் பயின்று, ஆசானாய்த் திகழ்ந்த தந்தை பெரியார் அவர்களை கருத்து வேறுபாடுகள் நிமித்தம் எதிர்த்து நின்று, பின்னர் பேரறிஞர் அண்ணாவின் ஆட்சி அமைந்து, அய்யாவின் கொள்கைகள் சட்டமாக்கப் பட்டு, அண்ணாவைத் தொடர்ந்து, ஆட்சியே பெரியாருக்கு சமர்ப்பணம் என்ற அண்ணாவின் வழியில் ஐயாவைப் போற்றிய தலைவர் கலைஞர் அவர்களுக்கு வெள்ளி சிம்மாசனம் தந்து, தந்தை பெரியார், “ நீங்க தான் உட்காரனும். உட்காருங்கோ! “ என உரிமையோடு தனது மகனனைய மாணவர் கலைஞர் அவர்களை அமரச் சொல்லி, “ இல்லை ஐயா, நீங்க தான் உட்காரனும் “ எனத் தலைவர் கலைஞர் அவர்கள் வற்புறுத்தி, இறுதியில் இருவருமே அமர்ந்த உணர்வு மிக்க விழா நடைபெற்ற சிறப்புகளை தன்னகத்தே கொண்ட தென்னகத்து இரும்பு நகராம் திராவிட கோட்டை தீந்தமிழ் சேலம் நோக்கிப் புறப்பட அன்புடன் அழைக்கிறார் அமைச்சர் உதயநிதி.



வழக்கறிஞர்
**வெ. அன்புவாணன்**
கொள்கை பரப்பு
துணைச் செயலாளர்.

கழகத்தின் அறிவுப் பெட்டகமாம் தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி மாமேதை மாறன் அவர்கள் தனது கல்லூரிப் பருவத்தில் உலவிய, திராவிட, பகுத்தறிவு பெருங் கொள்கைகளின் அடித்தளமாய் திகழும் சேலம் மூதூருக்கு வேழம் நிகர் அறிவாற்றல் மிக்க கழக முன்னணியினர் உரை கேட்க அழைக்கிறார். நமது இதயங்களில் நிறைந்த உதயநிதி.

நிறைவாக இராமாயணம் என்பது ஆரிய திராவிட யுத்தம் என்ற பண்டித நேருவின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் இன்றைய இந்திய ஒன்றிய அரசு இறையாண்மையை காற்றில் பறக்க விட்டு, இந்தியா என்பது மதச்சார்பற்ற நாடு என அரசியலமைப்புச் சட்டத்தில் பிரகடணப்படுத்தப்பட்டதையும் மறந்து, சனாதன சங்கிகளின் மடமாய் மாறிப்போனதை தகர்க்க, இந்திய ஜனநாயகத்திற்கு, மதச்சார்பின்மைக்கு ஆபத்து வரும் போதெல்லாம் காஷ்மீர் தொடங்கி, கன்னியாகுமரி வரை முதலில் ஒலிக்கும் குரல், கழகத்தின் குரல், அது தலைவர் கலைஞரின் கம்பீரக் குரல் என்பதை வரலாற்றின் நெடிய பக்கங்கள் பதிவுசெய்துள்ளதைப் போல், இன்று தென்னகம் மட்டுமின்றி, இந்திய தேசமே எதிர்பார்க்கும் இரும்பு மனிதர் நமது தலைவர் தளபதியவர்களின் நாடாளுமன்ற தேர்தல் வியூகங்கள் வெளிப்படவுள்ள சேலத்தில் கூடிடுவோம்!

அவர் சிந்தை உதிக்கும் திட்டங்கள்
நிறைவேற சூளுரைப்போம்.

தமிழின விடியலுக்காய் விரல்தேய எழுதிய தலைவர் கலைஞரின் பேரப்பிள்ளை அழைக்கிறார்
பேரணியாய் புறப்படுவோம்.

ஜனநாயக குரல்வளை நெறிக்கப்பட்ட நெருக்கடிகால நெருப்பாற்றை ஓராண்டு நீந்திக் கடந்த தளபதியவர்களின் வீரப்பிள்ளை அழைக்கிறார் விரைந்து புறப்படுவோம்!

இந்தியாவின் வரலாறு காவிரிக்கரையிலிருந்தே எழுதப் பட வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி வந்த வாழையடி வாழையாய் அழைக்கிறார். வாஞ்சையுடன் புறப்படுவோம்;

**வாழ்க தளபதி!**
**வெல்க உதயநிதி!**

### கழக தலைமை இலக்கிய அணி துணைத் தலைவர்

# கவிச்சுடர் கவிதைப் பித்தன் தாயார் லூர்து மேரி மறைவு!

### கழக முன்னணியினர் அஞ்சலி!

*சென்னை, ஜன. 19 -*

*கழக தலைமை இலக்கிய அணித் துணைத் தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கவிச்சுடர் கவிதைப் பித்தன் அவர்களின் தாயார் லூர்துமேரி மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி செல்லத்துரை, கழகப் பொதுக்குழு உறுப்பினரும் நகர்மன்ற உறுப்பினருமான இரா.சு. சந்தோஷ் ஆகியோரின் தாயார் திருமதி. லூர்து மேரி ராஜா சுப்பையா அவர்கள் நேற்று முன்தினம் (17.1.2024) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (18.1.2024) மாலை 4 மணியளவில், புதுக்கோட்டை காந்திநகரில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு இறுதி நிகழ்வுகள் நடைபெற்றன.*

*இதில் கழக முன்னணியினர் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.*

### நாகை மாவட்டம் - தலைஞாயிறு ஒன்றியச் செயலாளர்

# மகா.குமார் மாமியார் என்.சந்திரா மறைவு!

### என்.கௌதமன் - கழகத்தினர் அஞ்சலி!

*நாகை. ஜன. 19 -*

*நாகை மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியச் செயலாளர் மகா.குமார் மாமியார் என்.சந்திரா இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*மறைந்த என்.சந்திராவிற்கு கணவர் என்.நாடிமுத்து, மகன் என்.தங்கபாலு, மகள் தங்க நிலா மகாகுமார் ஆகியோர் உள்ளனர்.*

*நாகை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் கருப்பம் புலம் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப் பட்டிருந்த அம்மையார் என்.சந்திராவின் உடலுக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் ஏராளமானவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.*

### தி.மு.க. மாணவர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், நாளை (20.1.2024 சனிக்கிழமை), காலை 11.00 மணியளவில், சேலம் மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் மாளிகை” ‘வீரபாண்டியார் அரங்கத்தில்’ எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ் காந்தி, மாணவர் அணி இணைச் செயலாளர்கள் சி. ஜெரால்டு, எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1) 27.01.2024 அன்று சென்னையில் நடைபெற உள்ள மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்; 2) 01.02.2024 அன்று, சென்னையில் யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா (United Students of India) கூட்டமைப்பின் சார்பில் நடைபெற உள்ள மாபெரும் மாணவர் பேரணி; 3) கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு மாநில அளவிலான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி; 4) மாணவர் அணி ஆக்கப் பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18 - நாள்: 18.01.2024

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர் - தி.மு.க. மாணவர் அணி

# உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!


























உலகப்புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டியை கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து சீறிப்பாய்ந்து சிறப்பாக விளையாடிய காளைகளுக்கும், திமிலைப்பிடித்து காளையை அடக்கிய காளையர்களுக்கும் தங்க மோதிரம், தங்கக்காசுகள் உள்ளிட்ட சிறப்பு பரிசுகள் வழங்கினார். மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் உயர்கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், கால்நடைத்துறை மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன், தமிழரசி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள், அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# திராவிட சினிமா

41

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**





படங்கள் உதவி : ஞானம்



## எம்.ஜி.ஆர். எனும் திராவிட எதிர் நாயகன் – 4

திராவிட சினிமாக்களுக்கும், அவை எம்.ஜி.ஆரே நடித்தவையாக இருந்தாலும், எம்.ஜி.ஆர். சினிமாக்களுக்குமான அடிப்படையான வேறுபாடுகள் அப்பட்டமானவை. திராவிட சினிமாக்கள் அடிப்படையில் நாயகத்துவ உருவாக்க நோக்கம் அறவே இல்லாதவை. ஆனால், அதன் நோக்கமான கருத்தியல் பரப்புதலையும் மீறி, அதன் வழியாகவே, தனது நாயகத்துவத்தை வளர்த்தெடுத்தவர் எம்.ஜி.ஆர்.



குறிப்பாக, கலைஞரது 'மலைக் கள்ளன்' போன்ற திரைப்படங்கள் உருவாக்கிக் கொடுத்த 'எளியவர்கள் நலன் கருதும் நாயகத்துவத்தை' கவனமாக திராவிடக் கருத்தியல் பேசாத படங்களின் வழியாகவும் வளர்த்தெடுத்தார். எம்.ஜி.ஆருக்கு சாதகமான இன்னொரு கூறையும் மறுத்துவிட முடியாது.

ஆம், அது திரைப்பட வணிகம் எனும் தவிர்க்க முடியாத ஒன்று. அதன் பண்பிலேயே திரைப்பட வணிகம் நாயகனுக்கான தீராத வேட்கை கொண்டது. அதன் பொருட்டு நாயகத்துவ உருவாக்கத்துக்கு இயல்பாகவே துணை போகும். சாமரம் வீசும் குணாம்சமும் அதனிடம் உண்டு.

### சாகசத்துக்கு சிவப்புக் கம்பளம்

நாயகத்துவம் இரண்டு நிலைகளில் உருவாக்கப்படுபவை. ஒன்று உணர்ச்சிகரமான கதைக்களத்தில் அதனை வெளிப்படுத்தும் வகையான உணர்ச்சி ததும்பும் நடிப்பு. மற்றொன்று சாகச வீரன் (ஆக்ஷன் ஹீரோ) வகை நாயகத்துவம். பெரும்பாலும், உலகமெங்கும் வணிகத் திரைப்படங்கள் இந்த இரண்டாம் வகை நாயகனையே பேணி வளர்க்கும் என்பது நிறுவப்பட்ட ஒன்று.

தமிழ்த் திரைப்படங்களின் மாபெரும் 'ஆக்ஷன் ஹீரோ' எம்.ஜி.ஆர். என்பதை மறுக்க முடியாது. அதனை அவர் கட்டமைத்துக் கொள்ள வணிக முதலாளிகள் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றனர். ஐம்பதுகளிலேயே எம்.ஜி.ஆர். திராவிடக் கருத்தியல் சாராத எழுத்தாளர்களை ஆதரித்து, அரவணைத்துக் கொண்டார். 'மலைக்கள்ளன்' வெற்றியைத் தொடர்ந்து, அதே பாணியில் சாகச நாயகனாக, டி.ஆர்.ராமண்ணா இயக்கத்தில் 'குலேபகாவலி' (1955), மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர்.சுந்தரம் தயாரிப்பு மற்றும் இயக்கத்தில் 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' (1956) படங்களிலும் நடித்தார். மாபெரும் வெற்றிப் படங்களான அவற்றில் அவரது கட்டற்ற சாகச நாயகன் பிம்பம் முழுமையாக வளர்த்தெடுக்கப் பட்டது. அதற்குத் தடையாகக் கருத்தியல் சொல்லப் பட வேண்டிய தேவைகள் அறவே இல்லை.

ஆனால், இப்படி வளர்ந்த பிம்பத்தைத் திராவிடக் கருத்தியல் பேச முனைந்த திரைப்படங்களும் எந்த வகையிலும் மட்டுப்படுத்த இயலவில்லை. ஏனெனில், என்னதான் கருத்தியலுக்கு அனுமதி வழங்கினாலும், திரைப்பட முதலாளிகளின் வணிக நோக்கம் இந்த 'சாகச நாயகனின்' பங்கினைக் குறைத்திட அனுமதிக்கவில்லை.

### காணாமல் போன கருத்தியல் நாயகியர்

இதைவிட விபரீதமாக எம்.ஜி.ஆருக்கு தேவர் பிலிம்ஸ் தொடர்பு 1956 ஆம் ஆண்டிலேயே 'தாய்க்குப் பின் தாரம்' படம் வழியாக உருவானது. இந்தத் 'தா' வரிசை திரைப்படங்கள் என்றறியப்படும் தேவர் பிலிம்ஸ் படங்கள் எம்.ஜி.ஆரின் 1960-களுக்குப் பின்னரான திரை இருப்புக் காலத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. மாடு, சிங்கம், புலி மற்றும் எம்.ஜி.ஆர். நடித்த தேவர் படங்களின் பிரதான நோக்கமே 'நல்லவர் / வல்லவர்' பிம்ப உருவாக்கமே.

எம்.ஜி.ஆருக்கு அவர் விருப்பப்படியான நூறு சதவீதமான அதிரடி / சாகச நாயகன் உருவாக்கம் இயல்பாக நிகழ்ந்தது. தாயை தெய்வமாக்கி வணங்கிய நாயகன், கூடுதலாக இளம் பெண்களை/ திரைப்பட நாயகியரைக் காட்சிப் பொருளாக்கிய விபத்தும் நிகழ்ந்தது.

இதன் மோசமான/ வேதனையான முரண், அதுவரை 'பராசக்தி' விமலாவாக, 'குணசேகரன்களை' திராவிடக் கருத்தியல் விளக்கங்களின் வழியாக உருவாக்கிய 'திராவிடச் சினிமாவின் பகுத்தறிவும் உரிமையும் விடுதலையும் பேசிய பெண்கள்' எம்.ஜி.ஆரின் திரைப்படங்களில் காணாமல் போயினர் என்பதே. ஆனால், பெரும் சோகம் பெண்களின் உள்ளங் கவர்ந்த அதிநாயகன் எனப் பேசப்பட்டு, தமிழ் சினிமாவின் 'ஆண்மை மிக்கக் கவர்ச்சி நடிகர் எம்.ஜி.ஆர்.' எனும் பிம்பமும் அவருக்கு உருவானது என்பதே.

### எம்.ஜி.ஆர் கொன்ற நாயகி

ஐம்பதுகளின் பிற்பகுதியில் எம்.ஜி.ஆர். தனது திரைப்படங்களின் ஆக்கங்களில் முழுக்கட்டுப்பாட்டை மேற்கொள்ளத் தொடங்கினார். வணிகத் திரைப்படங்களின் இன்னொரு பிரதான தேவை கவர்ச்சிகரமான நாயகியர். அநேகமான தொடக்க கால திராவிட சினிமாக்களில் அதிகமான படங்களின் நாயகி பி.பானுமதி. அவரது பிரபலம் அவரது பாடல் திறன் வழியாக உருவானது, நடிப்பால் அல்ல. ஆனால், அதன் உப நல்விளைவாக எந்த ஆண் முன்னும் நாணிக் கோணி நிற்காத, வெட்கித் தரையில் கால் விரலால் கோலமிடாத அவரது முகபாவம், இயல்பாக சுயமரியாதை கொண்ட 'திராவிடப் பெண்' என்ற பிம்பத்தைக் கட்டமைத்தது. ஆண்டி விட்டுப் பெண்ணானாலும், அரசியானாலும் ஒரே உடல்மொழிதான்.

எம்.ஜி.ஆர். போன்ற அதிநாயகத்துவப் பிம்ப உருவாக்கத்தின் தேவை தன்னைக் கவர்ச்சிப் பாவையாக நாயகனுக்கு அர்ப்பணிக்கும் பெண், தான் அதனை வென்றெடுக்கும் அரிய வாய்ப்பு எம்.ஜி.ஆர். தயாரித்து / இயக்கிய 'நாடோடி மன்னன் 'மூலம் கிடைத்தது. தன் நோக்கத்துக்கு சாதகமாக இல்லாத பானுமதி எனும் பிரபல நடிகை ஏற்றிருந்த பாத்திரத்தை 'கொன்றார்', இயக்குநர்/ நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன்.

**திரைப்படம் நெடுக எம்.ஜி.ஆர். கையில் ஒரு புத்தகத்தைப் படித்தபடி வருவார். அந்தப் புத்தகத்தின் முன் அட்டையில் காந்தி, பின் அட்டையில் அண்ணா. அநேகமாக அண்ணாயிஸமாக இருக்கலாம்.**

இதற்குப் பின்னர் அதே படத்தில் அறிமுகமானார் சரோஜாதேவி. சரோஜாதேவி - ஜெயலலிதா எனும் நடிகையர் பங்களிப்பில் உருவான எம்.ஜி.ஆர். எனும் 'ஆண்மை மிக்க' அதிநாயகத்துவமே அவரது பிம்பப் பொறியை உறுதிப்படுத்தியது.

எம்.ஜி.ஆர். எனும் எதிர் திராவிட நாயகன் உருவாக்கிய 'பாலியல் காட்சிப் பதுமைகள்' ஏராளம். அவர்களை எம்.ஜி.ஆர். திரையில் காட்சிப்படுத்திய விதம் விபரீதம். 'இங்கிலீசு படிச்சாலும் இன்பத் தமிழ் நாட்டிலே இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்பளே', 'பொண்ணாப் பொறந்தா ஆம்பள கிட்ட கழுத்த நீட்டிக்கணும், ஒன்று ரெண்டு மூணு முடிச்சு போட்டா வாங்கிக்கணும்' இன்னும் உண்டு ஏராளம்.

### ஊர் கொடுத்த உத்தரவு

1969 ஆம் ஆண்டில் வெளிவந்த 'நம்நாடு' திரைப்படம் எம்.ஜி.ஆர். உருவாக்கிய திரை ஆவணம். அண்ணாவின் மறைவுக்குப் பின் வந்த திரைப்படம். திரைப்படத்தில் எம்.ஜி.ஆர். தேர்தலில் வென்று, ஊராட்சி / நகராட்சி மன்றத் தலைவர் ஆகிறார்.

அந்தப் படத்தின் தயாரிப்பாளர் நாகிரெட்டியின் கூற்றுப்படி, திட்டமிட்டு உருவாக்கப்பட்ட 'வாங்கய்யா வாத்தியாரய்யா' பாடலை திரையரங்கில் ரசிகர்கள் மாபெரும் ஆரவாரத்துடன் வரவேற்றதை, எம்.ஜி.ஆர். முன்வரிசைக் கதவருகில் நின்று பார்த்து விட்டு, "நாட்டை ஆள மக்கள் உத்தரவு கொடுத்து விட்டனர்" என்றாராம்.

திரைப்படம் நெடுக எம்.ஜி.ஆர். கையில் ஒரு புத்தகத்தைப் படித்தபடி வருவார். அந்தப் புத்தகத்தின் முன் அட்டையில் காந்தி, பின் அட்டையில் அண்ணா. அநேகமாக அண்ணாயிஸமாக இருக்கலாம். எம்.ஜி.ஆர். வாழும் வீட்டில் காந்தி, நேரு, படேல், ஆகியோர் படங்களுடன் அண்ணாவும் இருப்பார். இப்படியாக முழுமையடைந்தார் எம்.ஜி.ஆர். எனும் திராவிட எதிர் நாயகன்.

(திராவிட எதிர்நாயகத்துவம் தொடரும்).

...படம் விரியும்

## இந்தியாவுக்கு சிகிச்சை தரும் தமிழ்நாடு!

ஒருமித்த குரலோடு 'நீட்' தேர்வை எதிர்க்கும் தமிழ்நாட்டுக்குத்தான், மருத்துவம் பார்க்க இந்தியா முழுவதிலும் இருந்து அதிக எண்ணிக்கையில் நோயாளிகள் வருகிறார்கள். சென்னை ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனைக்குக் கடந்த ஓராண்டில் மட்டும் 27 மாநிலங்களைச் சேர்ந்த 4,032 பேர் மருத்துவச் சிகிச்சைகளுக்காக வந்துள்ளனர். 2022-ஆம் ஆண்டிலும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த 3,039 பேர் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். ஆண்டுக்கு ஆண்டு இந்த எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. பிற மாநிலங்களில் அரசு மருத்துவமனைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதும், மருத்துவச் செலவுகள் அதிகமாக இருப்பதுமே தமிழ்நாட்டை நோக்கி வர காரணமாகக் கூறப்படுகிறது.

அனைவருக்கும் அனைத்தும் என்ற லட்சியக் கோட்பாட்டோடு செயல்படும் நமது 'திராவிட மாடல்' ஆட்சியில் வெளி மாநில நோயாளிகள் என்ற பாரபட்சங்களுக்கு இடமில்லாமல், அனைவருக்கும் வழங்கும் தரமான சிகிச்சையை அவர்களுக்கும் வழங்குகிறது. புலம்பெயர் தொழிலாளர்களும் அரசு மருத்துவமனைகளை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். வெளிமாநில மக்கள் நம்பி வரும் நமது அரசு மருத்துவர்கள் பெரும்பாலும் நீட் தேர்வு வருவதற்கு முன்பே மருத்துவர்களானவர்கள். அவர்களை நம்பித்தான் இத்தனை மாநிலங்களில் இருந்தும் நோயாளிகள் வருகிறார்கள், குணமடைந்து செல்கிறார்கள். இந்த வளமான கட்டமைப்பை சிதைக்கத்தான் நீட் திணிக்கப்படுகிறதோ என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

## :ப்ளாஷ்பேக்



### கழக அலுவலகத் திறப்பு விழா!

இன்றைய கழகத் தலைவர் அவர்கள், இளைஞர் அணிச் செயலாளராக இருந்த போது, திருப்பத்தூருக்கு கழக அலுவலகத் திறப்பு விழாவுக்கு வருகை தந்திருந்தார். 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த நிகழ்வில் கழக அலுவலகத்தைத் திறந்து வைத்து, கொடியேற்றி வைத்து, தொண்டர்களை ஊக்கப்படுத்தும் உரையை அவர் ஆற்றினார். 2006 ஆம் சட்டமன்றத் தேர்தலுக்கு எங்களை எல்லாம் தயார்படுத்தும் வகையில், அந்த நிகழ்வு அமைந்தது. அப்படியான தருணத்தில் அவருடன் நான் எடுத்துக்கொண்ட புகைப்படமிது.



அல்ராஜ்

**-ஏ.அல்ராஜ், ஊராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர், பரமனந்தல் கிராமம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியாருக்கு அம்பேத்கர் கொடுத்த விருந்து!

**1940 ஆம் ஆண்டு பெரியார் மும்பைக்கு தாராவியில் நடந்த கூட்டத்தில் அம்பேத்கரோடு கலந்துகொண்டு உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் அம்பேத்கரின் உரையை தமிழிலும், பெரியாரின் உரையை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தவர் அறிஞர் அண்ணா. இந்தக் கூட்டத்துக்கு முன்பாக பெரியாருக்கும் அவரோடு சென்றிருந்த குழுவினர் அனைவருக்கும் அம்பேத்கர் மிகப்பெரிய தேநீர் விருந்து வழங்கினார். இந்த விருந்தில் அன்றைய பம்பாய் நகரின் முக்கியப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். முந்தைய நாள் இரவும் பெரியாருக்கு அம்பேத்கர் விருந்து அளித்ததோடு, அவரோடு நீண்ட நேரம் உரையாடினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 362




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.